


| சந்தா [illegible] | ரூ. அ. |
|---|---|
| வருட சந்தா. .... | 3—0 |
| 6 மாத சந்தா. .... | 1-12 |
| வெளிநாடுகளுக்கு [illegible] | 4—0 |

ஆதி திராவிட சங்க[illegible]கு பாதி சந்தா வுக்கு அனுப்ப[illegible]

முன் பணமின்[illegible] திரிகை அனுப்பப் படமாட்ட[illegible]

# [வாரப்பதிப்பு.]

ஆசிரியர்
ஈ. வெ. இராமசாமி நாயக்கர்.

**ஈரோட்டினின்று ஞாயிறு தோறும் வெளி வருவது.**

**விளம்பர விகிதம்.**

| | ரூ. அ. |
|---|---|
| கலம் ஒன்றுக்கு வாரம் ஒன்றுக்கு | 5—0 |
| சில்லரை விளம்பரம் அங்குலம் 1க்கு | 0—8 |

நீடித்த கால விளம்பரம் செய்வோருக்கும், பெரிய விளம்பரம் செய்வோருக்கும், பிரத்தியேக விகிதம்.


முன் பணமின்றி விளம்பரம் பிரசுரிக்கப் படமாட்டாது.

பிறப் பொக்கு[illegible]லாவுயிர்க்குஞ் சிறப்பொவ்வா
செய் தொழி[illegible]ற்றுமையான்—குறள்.

ஒழுக்க முடைமை குடிமை யிழுக்க
மிழிந்த பிறப்பாய் விடும்—குறள்.


மாலை க | குரோதன-ஸூ கார்த்திகை-மீ கசு-வ (29—11—25) ஞாயிற்றுக்கிழமை | மலர் கூ





மகாத்மா காந்திக்கு ஜே!

வந்தேமாதரம்! அல்லாஹு அக்பர்!!

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

தமிழ்நாடு கதர் போர்டாரால் அத்தாட்சிப்பத்திரம் பெற்ற எங்கள் டிப்போவில் பல ரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளைப் பீசுகள், ஷர்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடிச்சேலைகள், சால்வைகள், அச்சு வேஷ்டிகள் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். பிரதி ஆர்டருடன் 100க்கு 25 ரூ. வீதம் அட்வான்சு அனுப்பவேண்டும். வி. பி. அனுப்ப முடியாத வெளிநாட்டு ஆர்டர்களுக்கு பூராத்தொகையும் முன் பணமாக அனுப்ப வேண்டும்.

ஆர். டி. முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா.)

## காங்கிரஸ் அத்தாட்சி பெற்ற சுத்த கதர்!

தமிழ் நாடு காங்கிரஸ் கதர் போர்டின் விலைக்கே விற்கப்படும். எல்லா ரகங்களும் கிடைக்கும். விலை ஜாபிதாவுக்கும் மற்ற விபரங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்துக்கு எழுதவும். சாம்பிள் (மாதிரி)க்கு 4 அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

கற்பக விநாயகர் கதர் நிலயம்,
மண்டி வீதி, ஈரோடு. (S. I. R.)

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்.

பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு உடனே ஆர்டர் செய்யுங்கள், ஆர்டர்கள் 100-க்கு 25 ரூபாய் வீதம் அட்வான்ஸ் அனுப்பவேண்டும். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன் பணமாகவே அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்) தமிழ் நாடு காங்கிரஸ் கமிட்டி.

ஸ்ரீமான் என். கே. சங்கரப்ப செட்டியார் கைநூல் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்திசெய்து நியாயமான விலைக்குவிற்று வருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்
காரியதரிசி, கத்தர் இலாகா.

விலாசம்:—
என். கே. சங்கரப்ப செட்டியார், கத்தர் ஸ்டோர்,
திருப்பூர், (தென் இந்தியா.

## திருப்பூர் சுத்த கத்தர் ஜவுளிகள்

பல ரகம்வேஸ்டிகள், துண்டுகள், வெள்ளை பீஸ் ரகங்கள், ஷர்ட்டிங், கோட்டிங், சிட்டி தினுசுகள், தாவணிகள், சுங்கடி சேலைகள் இன்னும் அநேக தினுசுகள் எங்களிடத்தில் கிடைக்கும். தேவைக்கு ஆர்டர் செய்யுங்கள். வி. பி. அனுப்பமுடியாத வெளிநாடுகளுக்கு பூராத்தொகையையும் முன்பணமாக அனுப்பவேண்டும்.

(அத்தாட்சி பத்திரம்.)

ஸ்ரீமான் ஆர். எம் எஸ். சிதம்பரம் செட்டியார் முத்துசாமி செட்டியார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்குவிற்றுவருகிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள் காரியதரிசி கத்தர் இலாகா

விலாசம்:—
ஆர். எம். எஸ். சிதம்பரம் செட்டியார், முத்துசாமி செட்டியார்,
கத்தர் டிப்போ, திருப்பூர், (தென் இந்தியா)

(7-வது பக்கம் தொடர்ச்சி)

ஆம் நோய் அதிகரித்துக் கொண்டு தான் வரும் என்று சொல்லிக் கொண்டே இருந்தார் அக்காலத்தில் நான் அக்கொள்கையை கண்டித்து பத்திரிகை மூலமாகவும், பேச்சு மூலமாகவும், எதிர் பிரசாரம் செய்ததுமுண்டு. ஏனெனில், தேச விடுதலைக்கு தியாகமே அவசியமான தெனக் கருதி தியாகத்தையும், கடமையையும் நோக்கி சென்று கொண்டிருந்ததால், இது அவ்வளவு முக்கியமானதாகத் தோன்றவில்லை. பலர் தியாகத்திற்கு பின் வாங்கியும் கடமையை அலக்ஷியஞ்செய்தும் ஏமாற்றப்பார்த்ததால் மகாத்மாவின் தியாக இயக்கம் ஒடுக்கப்பட்டு போய்விட்டது. இதன் காரணத்தால் கடமையோடு உரிமையையும் உணரவேண்டியதாகி அதன்பால் கவனம் செலுத்த வேண்டியதாயிற்று. தியாகமற்ற பெரும்பான்மையோரால் சுயராஜ்யக்கட்சி தோன்றியபிறகும் அதன் போக்கைக்கண்ட பிறகும் பிராமணரல்லாதார் கட்சி வலுப்படவேண்டியதாகி விட்டது. இதற்கு முன்தோன்றிய பிராமணரல்லாதார் கட்சி யெல்லா வகுப்புவாரி பிரதிநிதித்துவ உரிமையை வலியுறுத்திக் கொண்டே வந்திருக்கிறது. மிதவாதக்கட்சி பிராமணரல்லாதாரும் ஒப்புக்கொண்டு வலியுறுத்தி வந்திருக்கிறார்கள். எப்படி பார்த்தாலும் தற்கால நிலைமைக்கு இது மிகவும் அவசியமானது. முக்கியமாய் தாழ்த்தப்பட்டவகுப்பார் என்னும் தீண்டாதார் முதலியோருக்கு சர்க்கார்நியமனத்தின் மூலமாகத்தான் பிரதிநிதித்துவம் கிடைக்கிறதே அல்லாமல் தெரிந்தெடுப்பதால் அவர்களுக்கு எந்த உரிமையும் கிடைப்பதில்லை. பிராமணர்கள் தங்கள் மனதில் எவ்வாறு சுயநலம் குடிகொண்டிருந்தபோதிலும், வெளிக்கு தேசியவாதிகளைப்போல் வேஷம் போட்டுக்கொண்டு பாமர ஜனங்களிடத்தில் ஓட்டு கேழ்ப்பதால் பாமர ஜனங்கள் ஏமாந்து ஓட்டு செய்து விடுவதால் வெற்றி பெற்று விடுகிறார்கள். இல்லாவிட்டால், இவர்களுக்கு யாரும் ஓட்டு செய்ய மாட்டார்கள். பிராமணருக்கு அவர் பாத்தியம் வகுக்கப்பட்டு தனித்தேர்தல் வைத்துவிட்டால் அவர்கள் மற்றவர்களை ஏமாற்றவேண்டிய அவசியமே இராது. அது போலவே பிராமணரல்லாதாருக்கும், தீண்டாதார் எனப்படுவோருக்கும் சமமான பிரதிநிதித்துவமளிக்கப்பட்டால் ஒருவரையொருவர் ஏமாற்றவேண்டிய அவசியமிருக்காது. அப்படிச்செய்தால்தான் தீண்டப்படாதோர் என்பவர்கள் விடுதலைக்கு உதவியாயிருப்பார்கள். அப்பொழுதுதான் உண்மையான பிரதிநிதித்துவம் ராஜியநிர்வாகங்களுக்கும் சபைகளுக்கும் வந்துசேரும். அந்த சபையைக்கொண்டும் நிர்வாகத்தைக்கொண்டும் வலியுறுத்தும் விடுதலை பிரயத்தனங்கள் தான் தேசத்திற்கு உபயோகப்படும். தேசத்திலும் ஒற்றுமை ஏற்படும் என பேசி முடித்தார்.

**ஸ்ரீமான் சிங்காரவேலு செட்டியார்**

கேடுவரும் பின்னே மதிகெட்டுவரும் முன்னே என்னும்பழமொழிக்கொப்ப இத்தகைய வித்தியாச உணர்ச்சி தோன்றியிருப்பதாகத் தெரிகிறதென்றும், மதம், ஜாதி, என்னும் இரண்டுபேய்கள் தேசமக்களைப்பிடித்தாட்டுகிறதென்றும் ஆயிரக்கணக்கான வருடங்களாக நாட்டில் வித்தியாசங்கள்பல தோன்றி அநேக தொல்லைகளேற்பட்டிருந்தனவென்றும், இந்தியாவிலுள்ள ஜனங்களுக்கு இங்லாந்தில் சாக்கடைசுத்தி செய்பவனுக்கு ஏற்பட்டுள்ள சுதந்தரம் கூட இல்லையென்றும், இத்தகைய வித்தியாசங்களினால்தான் நம் நாடு அடிமைப்பட்டு கிடக்கிறதென்றும், இத்தகைய வேற்றுமைக்கும் வித்தியாச உணர்ச்சிக்கும் பதவிகள்தான் காரணமென்றும், மேல்நாடுகளில் பலவகுப்புகள இருந்தபோதிலும் வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் தலைகாட்டுவதில்லையென்றும், சட்டசபையில் பெரும்பான்மையாயிருக்கும் வகுப்பார் என்னநன்மை செய்துவிட்டார்களென்றும், காங்கிரஸ்காரர்கள் சட்டசபைக்குப் போய் அரசாங்கத்துக்கு பாரிஸ் வாய்வு உண்டாக்கவேண்டுமென்றும் பேசி முடித்தார்.

ஸ்ரீமான். ஓ. கந்தசாமி செட்டியார். சமூகநியாயம் தேசீய ஐக்கியம் இரண்டும் ஒன்றையொன்று தாங்கிநிற்கவேண்டுமென்றும், நம்முடைய தேசத்தில் இவ்விரண்டும் இல்லையென்றும், நாம் உண்மையில் சுயராஜ்யம் வேண்டுமென்று ஆசைப்பட்டால் இரண்டையும் கையாளவேண்டுமென்றும், பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார் இந்த மூன்றுபேருக்குள்ளிருக்கும் புண்களை ஆற்றவேண்டுமென்றும் புண்ணுக்கு வைத்தியம் செய்வதுடன் ரத்தசுத்திக்கு மருந்தும் கொடுக்கவேண்டுமென்றும் இந்தக்கூட்டம் ஒரு புண்ணை மாத்திரம் ஆற்ற எத்தனப்படுகிறதென்றும், இப்பொழுது ஆதிக்கத்திலிருக்கும் பிராமணரல்லாதார் தீண்டாதாரின் குறைகளை நிவர்த்தி செய்யாமல் பிராமணர்களை மாத்திரம் குறை கூறுவது நியாயமாகாதென்றும், நீங்கள் பிராமணர்களைக்கண்டிக்கிறீர்களேயன்றி, தீண்டாதாருக்கு ஒரு உபகாரமாவது செய்து அவர்களை கைதூக்கிவிடவில்லையென்றும், ஆகையால், இந்த அபிப்பிராயபேதங்களை அகற்றவேண்டுமென்றும், டாக்டர் நாயர் செய்த வேலையை ஒருவரும் சரியாய் தெரிந்து கொள்ளவில்லையென்றும், அவருடைய இயக்கம் தீண்டாதாருக்கு அதிக நலங்களைக்கொடுத்ததென்றும், இப்பொழுதிருக்கும் பிராமணரல்லாதார் (ஜஸ்டிஸ்கட்சியார்) டாக்டர் நாயரின் பெயரை எடுத்தாள்வது பாவமாகுமென்றும், இந்தபிராமணரல்லாதார் தீண்டாதாரைக்கூப்பிட்டு வைத்துக்கொண்டு ஒரு ஏற்பாடு செய்ய வேண்டுமேயன்றி, இம்மாதிரி யெல்லாம் செய்தல் கூடாதெனப்பேசி முடித்தார்.

(தொடரும்)

---

## காஸல மாஸல காப்பி

## விரும்பும் நண்பர்களுக்கு.

### உடல் நலஞ்செய்யும் காப்பி முறை

காப்பி ஓட்டல்காரர்களும், வியாபாரிகளும் கீழ்க்கண்டிருக்கும் முறைப் பிரகாரம் காப்பித்தூள் தயார் செய்து வியாபாரம் செய்வார்களானால், நம் இந்தியர்களுக்கிருக்கும் அநேக வியாதிகள், உடல்நலத்தைக்கெடுக்கும் இடையூறுகள் நீங்கி, தேகசுகத்துடன் வாழ்வார்கள்.

ஆவாரம்பூ ஒரு பங்கு
நன்னாரி வேர் அரைப்பங்கு
கோத்துமல்லி சால்ப்பங்கு
சுக்கு பதினாரில் வொரு பங்கு.

இவை நான்கு வஸ்துக்களையும் வெயிலில் உலர்த்தி சூரணித்து ஓர் டப்பாவில் காற்றுப் போ[illegible] வைத்துக் கொள்ள வேண்டும். கா[illegible], மாலையிலும் அல்லது தங்களுக்கு[illegible]டைய எந்த சமயத்திலும் காப்பித்தூள், [illegible]லை, இவைகளை உபயோகித்துக் கொள்[illegible]ப்போல் இந்தத்தூளையும் உபயோகப்[illegible]க் கொள்ளலாம். இத்துடன் கல[illegible]துச் சீனி சர்க்கரை இவைகளைப் பார்க்[illegible]நம்முடைய நாட்டின் இயற்கைக் கிசை[illegible]ளை வெல்லம் சேர்த்துக் கொள்வது [illegible]கத்துக்கு நல்ல மேனியைக் கொடுத்து நோயை கண்டிக்கும். பனை வெல்லம் கிடையா விட்டால் சீனி சேர்த்துக் கொள்ளலாம். ஆனால், உடலுக்கு அது நலனைக் கொடுக்கா. மேற்காட்டிய விதம் ஒவ்வொரு தமிழ் மகனும் இந்தியனும் முயற்சியோடு செய்து காப்பியை நிறுத்தி இதையே அருந்துவார்களானால் இந்தியர்கள், முக்கியமாய்த்தமிழர்கள், தேகபலமும், இந்திரிய விருத்தியும். உடலில் நல்ல உதிர வோட்டமும் பெறுவார்களென்பது திண்ணம். மூக்காலும் திண்ணம்.

அனுபவ வைத்தியன்.

---

## மதிப்புரை.

### தஞ்சைமித்திரன்.

இப்பெயர் பூண்ட ஓர் தமிழ் வாரப்பத்திரிகை தஞ்சையினின்றும் புதன்கிழமை தோறும் வெளிவருகிறது. இதன் ஆசிரியர் அ. சேஷாத்திரி சர்மாவாவர் இது முக்கியமாய் தஞ்சை ஜில்லாவிலுள்ள மக்களின் நன்மையை பெரிதும் கவனிப்பதற்காக வெளிவந்தாகத்தெரிகிறது. உள்நாடு வருட சந்தா ரூ 3-0-0 வெளிநாடு வருஷ சந்தா ரூ 4-0-0 வேண்டும் நண்பர்கள் மானேஜர் .தஞ்சைமித்திரன். வாலஸ் பிரிண்டிங் ஹௌஸ் வடக்கு ராஜவீதி தஞ்சை. என்ற விலாசத்திற்கு எழுதவும்.

# காஞ்சீபுரம் ராஜீய மகா நாடு.

21-11-25 சனிக்கிழமை பகல் 12 மணிக்கு மகா நாட்டுத் தலைவர் ஸ்ரீமான். திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்களையும் ஸ்ரீமான்களான ஈ. வெ. ராமசாமி நாயக்கர் சக்கரைச் செட்டியார் சிங்காரவேலு செட்டியார் அவர்களையும் குதிரைச்சாரட்டு வண்டியில் வைத்து ஊர்வலமாய் மகாநாட்டுக்கு அழைத்துச் செல்லப்பட்டது. வழியில் ஸ்ரீமான். முதலியார் அவர்களுக்கு அவ்வூர் ஊராட்சி (முனிசிபல் சபை) க்காரர்களால் உபசாரப்பத்திரம் ஒன்று வாசித்துக் கொடுக்கப்பட்டது.

பின்னர் யாவரும் தலைவருடன் மகாநாட்டுப் பந்தலுக்குள் பிரவேசித்தார்கள். மகாநாடு சரியாய் ஒரு மணிக்கு துவக்கப்பட்டது. துவக்கத்தில் மாயபுரம் சகோதரி ஜெனகம்மாள் ஸ்ரீசுத்தானந்த பாரதியார் முதலியவர்களால் தெய்வ வணக்கமும் தேசிய பாட்டும் பாடப்பட்டவுடன் உபசரணைக் கமிட்டி அக்கிராசனர் ஸ்ரீமான். சி. என். முத்துரங்க முதலியார் தமது முகவுரைப் பிரசங்கத்தைப் படித்தார். அவர் வாசிக்கும் போது திக்கித்திக்கி எழுத்தைக் கூட்டி வாசித்தார். கூட்டத்திலிருந்து அடிக்கடி பொய்யென்றும், தப்பென்றும் இல்லை இல்லை என்றும் சப்தங்கள் வந்து கொண்டே யிருந்தன. இதனால், ஒழுங்காய் வாசிப்பதும் தடைப்பட்டு அடிக்கடி நிறுத்தி நிறுத்தி வாசிக்கவேண்டியதாயிற்று.

பிறகு தலைவர் தெரிந்தெடுப்பு நடந்தது. ஸ்ரீமான். முதலியார் அவர்களை முதலில் ஸ்ரீமான். சி. வி. நாயுடு பிரேரேபித்தார் இவர் ஒரே வார்த்தையில் முடித்து விட்டார். பின்னர் ஸ்ரீமான். S. சீனிவாசய்யங்கார் ஆதரிக்கையில் ஸ்ரீமான். முதலியார் ஒற்றுமைக்கு பாடு பட்டவர் என்று இறந்த காலத்தில் சொல்லி நாட்டிற்கு நன்மை செய்தாரோ இல்லையோ அது வேறே சங்கதி ஆனால் தமிழில் கெட்டிக்காரர் அவர் காங்கிரசுக்குப் போகாவிட்டாலும் ராஜீயவிஷயம் தெரியும். அவருடன் சேர்ந்து ஒத்துழைக்க ஆசை இருக்கிறது. மதவிஷயத்தில் தனக்கும் அவருக்கும் பேதமிருந்தாலும் அவரே அக்கிராசனம் வகிக்கவேண்டும் என்று பிரேரேபித்தார்.

பின்னர் ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு ஆதரிக்கையில் ஸ்ரீமான். முதலியாரை சிலர் சாதுமுதலியார் என்று சொல்லுவார்கள். அதை நான் ஒப்புக்கொள்வதில்லை மனதிலுள்ளதை உள்ளபடி சொல்லாமல் சமயத்திற்கு தகுந்தபடி மாறிவிடுகிறவர் அவர் முதலில் வைதீக ஒத்துழையாதாரா யிருந்தார் பிறகு சட்டசபைக்குப் போகிறவர் போகலாம் என்றார் இப்போது சுயராஜ்யக்கட்சியை ஆதரிக்கவேண்டுமென்கிறார். இனி அடுத்தாப்போல் சுயராஜ்யக்கட்சியில் சேர்ந்து விடுவார் அதன் தலைவராகவும் வந்துவிடுவார் என்று சொன்னதோடு தலைவர் உபன்யாசம் நடக்கும்போது யாரும் குறுக்கிடக்கூடாது என்றும் அதில் தப்பு கண்டு பிடிக்கிறவர்கள் மகாநாட்டுக்கு தீர்மானம் கொண்டுவந்து கண்டிக்காலம் என்றும் சொல்லி ஆதரித்தார்.

ஆமோதித்தவர்களும், ஆதரித்தவர்களும் தாராளமாய் மனதைவிட்டு முதலியாரின் பெருமையைப்பற்றி பேசாமல் இரண்டு பொருள் விளங்கும்படியே பேசினதால் மற்றும் இருவர்கள் அவரைப்பற்றி சரியானபடி எடுத்துச்சொல்லவேண்டும் எனக்கருதி இரண்டொரு முக்கியஸ்தர்கள் தாங்களும் சில வார்த்தைகள் சொல்லவேண்டும் என்று உபசரணைத்தலைவருக்கு இரண்டு சீட்டனுப்பினார்கள் உபசரணைத்தலைவர் அச்சீட்டை தனது பக்கத்திலிருந்த ஒரு பிராமணத்தலைவருக்குக்காட்டினார் அப்பிராமணத்தலைவர் அனுமதிக்கக்கூடாது என்றார் அந்தப்படியே அனுமதிக்க முடியாது என்று சொல்லிவிட்டார்.

பின்னர் ஸ்ரீமான். முதலியாரவர்கள் தன்னைப்பற்றி நன்மை, தீமை என இரண்டு வித பொருளபடும்படி பிரேரேபணை செய்த வாக்கியங்களை தெரிந்து கொண்டு மனங்கோணினவராய் தன்னைப்பற்றி புகழ்ச்சியாய்ச்சொன்னவைகளுக்கும் தான் அருகனல்லவென்றும் மற்றபடி பேசியதற்கும் அவரவர்கள் அப்படி என்னை நினைத்துக்கொண்டது தான் என்றும் அதற்கும் தான் அருகனல்லவென்றும் சொல்லிவிட்டு உபசரணைத்தலைவர் பிரசங்கம் படிக்கும்போது ஏற்பட்ட நிகழ்ச்சிகள் தான் படிக்கும் போதும் ஏற்படாமல் இருக்கும்படி தனது உபன்யாசம் பொதுவாகவே இருக்குமென்றும் சொல்லி வேண்டிய அப்புகட்டு கட்டிக்கொண்டு படித்தார் இடை இடையே தான் எழுதியிருப்பதில் சிலதுகளுக்கு வியாக்கியானமும் செய்துகொண்டேபோனார். தலைவர் முன்னுரை முடிந்ததும் விஷயாலோசனை சபைக்கு அங்கத்தினர்கள் தெரிந்தெடுக்கவும் கதர்ச்சாலை திறக்கவும் கூட்டத்தை ஒத்திபோடும் போது ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளை எழுந்து பிராமணரல்லாதார் மகாநாடு ஒன்று இக்கூட்டம் கலைந்த உடன் கூடப்போகிறது தயவு செய்து எல்லாபிராமணரல்லாதாரும் வரவேண்டும் என்றும் இதை ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர் இங்கு தெரிவிக்கும்படி சொன்னார் என்றும் சொன்னார்.

(அது போலவே ஒருபெரிய பிராமணரல்லாதார் மகாநாடு கூடிற்று அதன் விபரம் வேறு தலைப்பில் இருக்கிறது.)

## இரண்டாம் நாள் நடவடிக்கை.

ஞாயிற்றுக்கிழமை பகல் ஒரு மணிக்கு மகாநாடு துவக்கப்பட்டது. தலைவர் ஸ்ரீமான். முதலியார் வரும்போதே தலைவர் என்கிற முறையில் தான் மகாநாட்டில் செய்யப்போகும் காரியங்களுக்குக் காப்பு கட்டிக்கொள்வதற்காக சிலவார்த்தைகள் சொன்னார். "மகாநாட்டை அமைதியாய் நடத்திக்கொடுக்கவேண்டும் இப்பொழுது இங்கு வகுப்பு உணர்ச்சி மிகுந்திருப்பதாய்த் தெரிகிறது. அதனால் பலத்தவாத சண்டைகள் நடக்கும்போல் தெரிகிறது. அத்துடனில்லாமல் கைச்சண்டைக்குக் கூட சிலர் ஆரம்பித்து விடுவதாகக் கேட்டு எனக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. அபிப்பிராய பேதமிருந்தால் அதை பொறுமையாகக் கேட்கவேண்டும் பலாத்காரமின்மையை நீங்கள் அவசியம் கைக்கொள்ளவேண்டும்" என்று சொல்லி நடவடிக்கைகளை ஆரம்பித்தார்.

## முதலாவது தீர்மானம்.

1. பாட்னாவில் கூடிய அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானத்தை கதராடை எப்போதும் கட்டாயமாய் உடுத்தவேண்டும் என்ற மாறுதலுடன் காங்கிரஸ் உறுதி செய்யவேண்டுமாய் இம்மகாநாடு சிபார்சு செய்கிறது.

2. இப்போது சுயராஜ்யக்கட்சியார் நடத்திவரும் ராஜீயத்திட்டத்தில் குறைவுபடாமல் இன்னும் தீவிரமாக காங்கிரஸ்ராஜீய வேலைத்திட்டத்தை நடத்தி சட்டசபை தேர்தல்களையும் நடத்த வேண்டுமென்றும் இனி சுயராஜ்யக்கட்சி என்ற பெயரே வேண்டாமென்றும் இம்மகாநாடு கான்பூர் காங்கிரசுக்கு சிபார்சு செய்கிறது.

என்ற தீர்மானத்தை ஸ்ரீமான். S. சீனிவாசய்யங்கார் பிரேரேபித்து பேசியதின் சுருக்கம்.

இத்தீர்மானமானது தமிழ்நாட்டிற்கே புதியது என்றும் அதனால்தான் தான் பிரேரேபிப்பதாயும் நமக்கு எதிரிகள் பலரா யிருப்பதால் காங்கிரசும் சுயராஜ்யக்கட்சியும் ஒன்றாகிவிடவேண்டும் என்றும் சுயராஜ்யக்கட்சி சட்டசபை ஒத்துழையாமை செய்வதில்லை என்று சிலர் சொல்வதை கவனிக்கக்கூடாது என்றும் இதெல்லாம் நாம் சரிசெய்து கொள்ளக்கூடிய சிறு விஷயங்கள் என்றும் முட்டுக்கட்டை போடுவதுதான் சுயராஜ்யக்கட்சி கொள்கையென்றும் வகுப்பு நன்மைகளைப் பற்றிக்கூட சுயராஜ்யக்கட்சியார் கவனிப்பார் என்றும் சொல்லித்தீர்மானத்தை ஆதரிக்கும்படி கேட்டுக்கொண்டார்.

## ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு பேசியதின் சுருக்கம்.

ஆதரிக்கையில் காங்கிரசில் நாம் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறோம். சுயராஜ்யம் அடையவேண்டுமானால் சுயராஜ்யக்கட்சியையே காங்கிரசாக்கவேண்டும். சுயராஜ்யக்கட்சி திட்டம் மறைந்துபோனால் நமக்குள்ளாக வகுப்பு வித்தியாசமேற்படாது. சுயராஜ்யக்கட்சியார் கவர்மெண்டை எதிர்க்கிறார்கள். முட்டுக்கட்டைக்காக சட்ட சபைக்குப்போய் உத்தியோகம் பெற்றுக்கொள்ளுகிறார்களே என்று சொல்லிக்கொண்டிருப்பதில் பிரயோஜனமில்லை அப்படி செய்பவர்கள் எங்குமிருப்பார்கள். இப்போது பிராமணர், பிராமணர் அல்லாதார் இவர்களுக்குள் வேற்றுமை ஏற்பட்டிருக்கிறது. இதை நிவர்த்திக்க இவர்களுக்கு உத்தியோகங்களும் ஸ்தானங்களும்

பகிர்ந்து கொடுப்பதற்காக ஒரு சமரச போர்டு ஏற்படப்போகின்றது. பிராமணர்கள் எல்லாஸ்தானங்களையும் கைப்பற்றி விடுவார்களே என்று நாம் கவலைப்படக்கூடாது. பிறகு எல்லாம் சரிப்படுத்திக்கொள்ளலாம். பிராமணர்களைக்கண்டு அனாவசியமாய் பயப்படக்கூடாது என்று சொல்லி தீர்மானத்தை ஆதரித்தார்.

### திருத்தப்பிரேரேபனை.

சட்ட சபைகளில் சகல அதிகாரவிஷயங்களிலும் ஒத்துழையாமையை கையாள வேண்டும் தங்களால் அப்படிச்செய்ய முடியாவிட்டால் ஸ்தானங்களை காலி செய்துவிட்டு வெளியே வந்து சுயராஜ்யம் ஏற்படுத்தத் தக்க காரியங்கள் செய்யவேண்டும் என்கிற திருத்தப்பிரேரேபணையை ஸ்ரீமான் சிங்காரவேலு செட்டியார் பிரேரேபித்து பேசியதாவது பண்டித நேருவும் ஸ்ரீமான் A ரங்கசாமி அய்யங்காரும் கமிட்டிகளில் ஸ்தானம்வகித்தது தப்பு என்றும் ஸ்ரீமான் படேல் 4000 ரூ உத்தியோகம் பெற்றது தப்புஎன்றும் இதனால் ஜனங்களுக்கு அக்கட்சியிடம் நம்பிக்கையும் மதிப்பும் உண்டாகவில்லையென்றும் ஓட்டர்கள் அவர்களுக்கு உத்தியோகம்பெற உத்திரவு கொடுக்கவில்லை யென்றும், தேர்தலில் சுயராஜ்யக்ககட்சியார் கொடுத்த வாக்கை மீறிநடந்து விட்டார்கள் என்றும். ஆகலால் காங்கிரசே இந்த வேலையை செய்தால்தான் சுயராஜ்யக்கட்சியாரை யோக்கியமாய் நடத்த முடியுமென்றும் சொன்னார்.

### ஸ்ரீமான் ராமபத்திரஉடையார்

திருத்தத்தை ஆதரிக்காமல் கவர்மெண்டை நடக்கவொட்டாமல் செய்ய சட்டசபைக்கு போன சுயராஜ்யக்கட்சி உத்தியோகங்களையும் ஸ்தானங்களையும் பெற்று கவர்மெண்ட் நடக்க அனுகூல மாயிருக்கிறார்கள். என்றும் சுயராஜ்யக்கட்சியார் இப்படி எல்லாம் ஜனங்களை ஏமாற்றாமல் ஒழுங்காய் நடக்க வேண்டும் என்றும் சொன்னார்.

### ஸ்ரீமான். ஈ. வே. ராமசாமி நாயக்கர்.

ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அடியோடு அசல் தீர்மானத்தையே எதிர்த்து பேசுகையில் தீர்மானமே ஜனங்களை ஏமாற்றுகிற மாதிரியில் எழுதியிருக்கிறதென்றும் பாட்னா தீர்மானம் என்ன என்பதும் சுயராஜ்யக்கட்சி திட்டம் என்ன என்பதும் இங்குள்ள அனேகருக்கே தெரியவில்லை என்றும் தெரியும்படி யாரும் எடுத்து சொல்லவில்லையென்றும் காங்கிரசின் பெயர் கெடாமலிருக்கவே சுயராஜ்யக்கட்சி;திட்டத்தை காங்கிரஸ் ஒப்புக்கொள்ளவில்லையென்றும் காங்கிரசுக்காவது மகாத்மாவுக்காவது சுயராஜ்யக்கட்சி திட்டத்தில் நம்பிக்கையில்லையென்றும் டில்லி காகிநாடா முதலிய தீர்மானங்களாலும் மகாத்மாவின் சலுகையாலும் தாங்கள் வேண்டியளவு பிரசாரம் செய்ய சவுகரியமேற்படுத்திக்கொண்டதோடு வேறுயாரும் எதிர் பிரசாரம் செய்யக்கூடாதென்று மகாத்மாவிடம் சிபார்சு பெற்றுக்கொண்டதாலும் மீறி எதிர் பிரசாரம் செய்பவர்களை சுயராஜ்யக்கட்சிக்காரரும் அவர்கள் பத்திரிக்கையும் தூற்றி வருவதாலும் அதற்கு பயந்து கொண்டுயாரும் வெளியில் வராமல் வெகு சிலரே துணிவாய் அதன் தந்திரங்களையும் தப்பிதங்களையும் எடுத்துச்சொல்வதாலும் பொது ஜனங்களுக்கு சுயராஜ்யக் கட்சி ரகசியம் ஒன்றுமே தெரிவதற்கில்லாமல் போய்விட்டதென்றும் இதனால் ஜனங்களுக்கு சட்டசபை என்கிற விஷமே தலைக்கேரி வருகிறதென்றும் இந்த லக்ஷணத்தில் காங்கிரசே சுயராஜ்யக் கட்சி திட்டத்தை எற்று வேலை செய்ய வேண்டும் என்பது "குதிரை கிழே தூக்கிப் போட்டது மல்லாமல் ஆளையே புதைத்துவிட குழி பரித்தது" போல் ஆகிவிடும் என்றும் 3 வருஷமாகியும் இதுவரையில் சுயராஜ்யக் கட்சி என்ன வேலை செய்தது' பத்திரிக்கையில் மாத்திரம் வெற்றி மேல் வெற்றி என்று பெரிய எழுத்தில் எழுதிக் கொள்ளுகிறது. யாருக்கு வெற்றி என்று பார்த்தால் சர்க்காருக்குத் தான் என்று தெரிகிறது 'இரட்டை ஆக்ஷியை ஒழித்தாய் விட்டது' இதனால் லாபமென்ன வென்று பார்த்தால் ஒத்தையாட்சி பலப்பட்டது, "வரவு செலவு பட்ஜட் நிராகரிக்கப்பட்டது இதனால் லாபமென்னவென்று பார்த்தால் முன்னிலும் அதிக வரிவசூலிக்கப்படுகிறது. "சட்டசபை அக்கிராசனர் பதவி சுயராஜ்யக்கட்சியாருக்கு வந்து விட்டது" இதனால் லாபமென்னவென்றால் சட்டசபையை ஒழுங்காய் நடத்த சுயராஜ்யக்கட்சியில் இருந்தே ஒரு ஆள் சம்பளத்துக்கு கிடைத்துவிட்டது. அந்த ஆள் ஒழுங்காய் நடத்திதருகிறேன் என்று சத்தியமும் செய்து கொடுத்திருக்கிறது. "மந்திரிகள் சம்பளத்தில் கொஞ்சம் ரூ. குறைத்தாயவிட்டது" இதனால் என்ன லாபம் என்றால் வேறு வேலை செய்ய சர்க்காருக்கு ரூ. கிடைத்தது. இப்படியே சுயராஜ்யக்கட்சியார் செய்யும் ஒவ்வொரு வேலையும் சர்க்காருக்கு வெற்றி மேல் வெற்றியும் தேசத்திற்கு தோல்வி மேல் தோல்வியுமே அல்லாமல் எந்த உத்தியோகம் குறைந்தது? எந்த வெள்ளைக்காரர் சம்பளம் குறைந்தது? எந்த வழியில் நம்ம பணம் சீமைக்குப்போகாமல் இருக்கிறது?

சுயராஜ்யக்கட்சிக்கு இப்போது தேசத்தில் யோக்கியதையும் நாணயமும் செல்வாக்கும் குறைந்து அது சாகப்போகும்தருவாயிலிருந்து தப்புவதற்காககாங்கிரசையே சுயராஜ்ஜியக்கட்சியாக்க தீர்மானம் கொண்டுவந்திருக்கிறார்கள். சுயராஜ்யக் கட்சி ஓட்டர்களிடம் சொன்னபடி நடந்து கொள்ளவில்லை என்றும் இப்பொழுது கொஞ்சம் சுயராஜ்யக்கட்சிக்கு இடம் கொடுத்ததிலேயே தேசத்தில் எவ்வளவு கட்சிகளும் மனஸ்தாபங்களும் வளர்த்து நிர்மாணத்திட்டங்கள் கெட்டு ஒத்துழையாமை என்பதே ஜனங்களுக்கு ஒரு பழைய கதையாய் போய்விட்டதென்றும் இனியும் இடம் கொடுத்து காங்கிரசே சட்டசபைக்கு போவதானால் மறுபடியும் பத்து வருஷமானாலும் ஜனங்களை திருப்ப முடியாதென்றும் ஆகையால் தீர்மானத்தை அடியோடு நிராகரிக்க வேண்டும் என்றும் பேசினார்.

### ஸ்ரீமான். எஸ். ராமநாதனும்

இத்தீர்மானத்தை எதிர்த்து பேசும்போது காங்கிரஸ் என்பது தேசத்தின் பொதுஸ்தாபனம் என்றும் எந்த தனிப்பட்டகட்சிக்கும் சொந்தமாயிருக்கக்கூடாது என்றும் சுயராஜ்யக்கட்சியாருக்கும் காங்கிரசில் இடமிருக்க வேண்டுமென்றே அதன் திட்டங்களில் நம்பிக்கையில்லாத போதும் அவர்களுக்கு சட்டசபை பிரவேசம் அனுமதிக்கப்பட்டதென்றும் அது போலவே மிதவாதிகளுக்கும் ஜஸ்டிஸ் கட்சிமுதலியோருக்கும் இடம் இருக்கும்படி செய்யவேண்டும் என்றும் தங்களைத் தவிர வேறு கட்சியார் காங்கிரசில் நுழையாமல் செய்வது தான் சுயராஜ்யக்கட்சிக்கு திட்டமாயிருக்கிறதென்றும் இத்தீர்மானத்தை ஒப்புக்கொண்டால் காங்கிரசே சுயராஜயக் கட்சி ஆய்விடுமென்றும் அதனால் தேசத்தில் ஒற்றுமைகெட்டு காங்கிரசே மறைந்து விடும் என்றும் காங்கிரஸ் பணத்தை எடுத்து காங்கிரசுக்கு கொஞ்சம்கூட நம்பிக்கையே இல்லாததிட்டங்களை உடைய சுயராஜ்யக் கட்சியார் சட்டசபைக்குப் போகதிப்பது சுத்த பயித்தியக்காரத்தனமென்றும் சொல்லி எதிர்த்தார்.

ஸ்ரீமான். வெங்கிடகிருஷ்ண பிள்ளையும் தீர்மானத்தின் இரண்டாவது பாகத்தை ஆக்ஷேபித்துப் பேசினார்.

ஸ்ரீமான். தண்டபாணி பிள்ளையும் தீர்மானத்தை ஆக்ஷேபித்தார்.

ஸ்ரீமான். சேலம் கந்தசாமி பிள்ளை திருத்தத்தை ஆதரித்தார்.

### ஸ்ரீமான். சத்திய மூர்த்தி.

அசல் தீர்மானத்தை ஆதரித்து பேசுகையில் இரண்டாவது பாகம் உங்களுக்கு பிடிக்காவிட்டால் நாங்கள் வாபீசுவாங்கிக் கொள்ளுகிறோம். பாடலீபுரம் தீர்மானம் உங்களுக்குத்தெரியுமென்று நினைக்கிறேன் தெரியாதிருந்தால் இதோ வாசிக்கிறேன் என்றும் (சில பாகம் படித்துக்காட்டினார்) ஸ்ரீமான்கள் நாயக்கரும் ராமநாதனும் காங்கிரஸ் சுயராஜ்யக்கட்சிக்கு அதிகாரம் கொடுத்து விட்டதாக சொல்வது தவறு காங்கிரஸ் வேலையைத்தான் சுயராஜ்யக்கட்சியார் பார்த்து வருகின்றனர். ஆதலால் அந்த ராஜீய வேலையை காங்கிரசே பார்க்க வேண்டும் என்பது தான் அதன் அர்த்தம் கவர்மெண்டை ஸ்தாபிக்கச்செய்ய வேண்டுமென்று ஸ்ரீமான். சிங்காரவேலு செட்டியார் சொன்னார் சட்டசபை மூலம் கவர்மெண்டை ஸ்தாபிக்கச்செய்வது என்பது ஒருக்காலும் முடியாது. சட்டசபை மூலம் கவர்மெண்ட் நடத்துவதை கஷ்டமாக்குவதாகத்தான் சுயராஜ்யக்கட்சியார் ஆதியில் சொன்னார்கள். சட்ட சபைகளில் மெம்பர்கள் ஸ்தானம் பெறக்கூடாது என்பதைப்பற்றியும் கான்பூர் காங்கிரஸ் முடிவு செய்யும். சுயராஜ்யக்கட்சியார் என்ன புரட்டி விட்டார்கள் என்று நாயக்கர் கேழ்கிறார். மகாத்மாவே சுயராஜ்யக்கட்சியைப்பற்றி சொல்லியிருப்பதை கேளுங்கள் என்று மகாத்மா சுயராஜ்யக்கட்சியாரைப்பற்றி எழுதியுள்ளதை வாசித்துக்காட்டிமேலே பேசியதாவது ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி

நாயக்கர் இரட்டை ஆட்சியை ஒழித்து ஒத்தை ஆட்சியை பலப்படுத்தினதாகச் சொன்னார். இதுவார்த்தை அழகு நன்றாய்த்தான் இருக்கிறது. ஆனால் அதில் அர்த்தம் இல்லை. விஷயம் அப்படியல்ல நாங்கள் வேலை செய்யாவிட்டால் ஒன்றும் செய்யவில்லை என்கிறார் வேலைசெய்தால் செய்தது ஒன்றும் பிரயோஜனமில்லை என்கிறார் இதற்கு நாங்கள் எப்படி பதில் சொல்வது. நாங்கள் செய்திருக்கும் வேலைஜனங்களுக்கே ஒருவித புதிய உணர்ச்சியை உண்டுபண்ணியிருக்கிறது. நாயக்கர் வரி குறையவில்லை என்கிறார். நாங்கள் சட்டசபைக்குப் போனபின் தான் உப்புவரி குறைக்கப்பட்டது. நாங்கள் போன பிறகு எந்தவரியும் உயர்த்தப்படவில்லை ராஜ விசுவாசப்பிரமாணமென்பது சட்டசபை வேலையை உண்மையாய்ச் செய்கிறோம் என்பதுதான் அதன் கருத்து. தடை வேலையும் உண்மையாய்ச்செய்வதில் சேர்ந்ததுதான் ஆகையால் அந்தப்பிரமாணம் செய்தது தப்பாகாது. காங்கிரஸ் பணத்தை சுயராஜ்யக்கட்சிக்கு உபயோகப்படுத்தக்கூடாது என்று சொல்லப்பட்டது. தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியில் 2000 ரூ கடன்தானிருக்கிறது. மிதவாதக் கட்சிக்கும் ஜஸ்டிஸ் கட்சிக்கும் காங்கிரசில் இடம் இருக்கவேண்டும் என்று ஸ்ரீமான். ராமநாதன் சொன்னார். காங்கிரஸ் என்பது சத்திரமா சாவடியா என்று எனக்கு தெரியவில்லை என்று பேசி ஆதரித்தார். இந்த நிலைமையில் தீர்மானம் இரண்டு பாகமும் ஓட்டுக்கு விட்டால் தோற்றுப் போகும் போலிருந்ததால் ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார் இரண்டாவது பாகத்தை வாபீசு வாங்கிக் கொள்வதாய்ச் சொல்லி முதல் பாகத்தையாவது ஜனங்கள் ஒப்புக்கொள்ள வேண்டும் என்கிற கவலையில் இருந்ததால் அக்கிராசனர் ஸ்ரீமான். ராஜகோபாலாச்சாரியாரை முதல் பாகத்தை ஒப்புக்கொள்ளும்படி கொஞ்சம் பேசவேண்டுமென கேட்டுக் கொண்டார், ஸ்ரீமான்.ராஜகோபாலாச்சாரியார் எழுந்து தீர்மானத்தின் முதல் பாகத்தைப் பற்றி தனக்கு திருப்தி என்றும் இரண்டாவது தீர்மானத்தைப் பற்றியோ வென்றால் எனக்கு சட்டசபையில் கொஞ்சமும் நம்பிக்கை யில்லை என்றும் அதில் நம்பிக்கை யில்லாதவர்கள் சட்டசபை வேலை அப்படி இருக்க வேண்டும் இப்படி இருக்க வேண்டும் என்று சொல்ல என்ன உரிமை உண்டென்றும் அதில் நம்பிக்கையில்லாதவர்கள் அதன்மேல் குற்றம் சொல்லக்கூடாது என்றும் சொல்லிவிட்டு காங்கிரஸ் சுயராஜ்பக்கட்சியாய் இருக்கவேண்டுமென்பதை சட்டசபையில் நம்பிக்கையில்லாதவர்கள் ஒப்புக்கொள்ள முடியாது. நம்பிக்கை உள்ளவர்கள் தான் அதை நடத்த வேண்டும் என்றும் சுயராஜ்யக்கட்சியார் உத்தியோகம் ஒப்புக்கொள்ளக்கூடாது என்று நாம் ஏன் சொல்லவேண்டும். இது விஷயம் பண்டிதர் நேருவுக்கு தெரியாதா பண்டிதர் சமயம் சந்தர்ப்பங்கள் அறிந்து அதற்குத்தகுந்தபடி நடந்துவருகிறார். என்றைக்கானாலும் சுயராஜ்பக்கட்சியார் சட்டசபை மோகம் விட்டு திரும்பவும் தன்னிடம் வந்து சேருவார்கள் என்கிற நம்பிக்கை மகாத்மாவுக்கு உண்டு. அதனால்த்தான் மகாத்மா சுயராஜ்யக்கட்சியை ஆதரிக்கிறார் என்றும் சுயராஜ்யக்கட்சித்தலைவர் ஸ்ரீமான். சீனிவாசய்யங்கார் கொண்டு வந்த தீர்மானத்திற்கு அக்கட்சியைச்சேர்ந்த ஸ்ரீமான். சிங்காரவேலு செட்டியார் திருத்தம் கொண்டுவந்தது நான் சரியென்று சொல்லமாட்டேன். சுயராஜ்யக்கட்சியாருக்கு கட்டுப்பாடுவேண்டும் என்று நான் நினைக்கிறேன் என்று சொல்லி முதல் பாகத்தை ஆதரித்தார். தீர்மானத்தின் இரண்டாம் பாகம் வாபீசு வாங்கிக்கொண்டதால் வெகு சில ஓட்டுகளே பெற்றுநிறைவேறியது பெரும்பான்மையோர் அனுகூலத்திற்கும் ஓட்டு கொடுக்காமல் பிரதிகூலத்திற்கும் ஓட்டு கொடுக்காமல் சும்மா இருந்தார்கள்.

### இரண்டாவது தீர்மானம்,

திருட்டுத் தனமாய் நிறைவேற்றப்பட்டது ஸ்தலஸ்தாபனங்களை காங்கிரஸ்காரர் கைப்பற்றுவது.

இத்தீர்மானத்தை எதிர்ப்பதாக ஸ்ரீமான் ஈ. வெ. ரமாசாமி நாயக்கர் தெரிவித்திருந்தும் ஒழுங்குப்படி பிரேரேபிக்காமலும் ஆமோதிக்காமலும் ஸ்ரீமான் ராமசாமி நாயக்கர் பின்னால் தாகத்துக்கு தண்ணீர் சாப்பிட்டுக் கொண்டிருக்கும்போது தலைவர் திடீரென்று எழுந்து தானே பிரேரேபித்து நிறைவேறி விட்டதென்று சொல்லி உட்கார்ந்து கொண்டார் அத்தீர்மானத்தில் கவலை உள்ள சிலர் உடனே நாயக்கரைப்பார்த்து உங்களை ஏமாற்றி விட்டோமே என்று சொல்லி தங்கள் சாமர்த்தியத்தைப்பற்றி பெருமைப்பட்டுக் கொண்டார்கள். ஆனாலும், காங்கிரஸ் கமிட்டி தீர்மானத்திற்கு இது விரோதமானதென்றும் இந்நிலையில் இது அமுலுக்கு வரத்தக்கதல்லவென்பதையும் இவர்கள் அறியவில்லை போலும்! இதுபோலவே மற்றும் சில தீர்மானங்களையும் தலைவர்பிரேரேபித்தார். அதாவது

3. தேசத் தொண்டு செய்து சிறைக்குப் போனவர்களுக்கும் மற்றும் பல தியாகங்கள் செய்தவர்களுக்கும், கிராம நிர்மாண வேலைகளிலும் நகர நிர்மாண வேலைகளிலும் வேலை அமைத்துக்கொடுக்க ஏற்பாடு செய்யவேண்டுமாய் கேட்டுக்கொள்ளுகிறது" என்பதையும்,

4. நமது மாகாணத்தில் குடி வழக்கத்தை ஒழிக்க பிரசாரத்தை மீண்டும் தீவிரமாய் நடத்தும்படி தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டியை இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது. என்பதையும்,

5. வைக்கம் சத்தியாக்கிரகப் போராட்டத்தின் காரணமாகவும் திருவாங்கூர் சமஸ்தானத்தின் ஆற்றலாலும் வைக்கத்தப்பன் கோவிலைச்சுற்றியுள்ள எல்லாப்பொது ரஸ்தாக்களையும் ஜாதி வித்தியாசமின்றி தீண்டாதார் எனப்படுவோர் உள்பட எல்லோருக்கும் உபயோகப்படுத்தும் உரிமையை சமீபத்தில் அளித்த ரீஜண்டு மகாராணியார் அவர்களை இம்மகாநாடு பாராட்டுகிறது. வைககம் சத்தியாக்கிரகத்தில் ஈடுபட்டு ஐயம்பெறும்படி செய்த நமதுதேசபக்தர் ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களும் மற்றுமுள்ள சத்தியாக்கிரகிகளும் செய்த தேசசேவையை இம்மகாநாடு பாராட்டி வாழ்த்துக்கூறுகிறது என்பதையும் தலைவர் பிரேரேபிக்க ஏகமனதாய் நிறைவேற்றப்பட்டது.


### கல்ப்பாத்தி பிராமணர்களின் உபத்திரவம்.

கல்ப்பாத்தி தேர் உற்சவத்தில் ஹிந்து மதத்தினரான ஆரியசமாஜத்தார் தேரோடும் வீதிகளில் செல்லலாகாதென்று ஸ்தல அதிகாரிகள் தடை உத்திரவு பிரப்பித்ததை இம்மகாநாடு பலமாகக்கண்டிக்கின்றதுடன், கல்பாப்த்திபிராமணர்கள் பிராமணரல்லாதார் அனைவரும் தீண்டாதார் எனப்படுவோர் தெருக்களில் போகக்கூடாதென்று சிறுமைப்படுத்தி அவர்களது உரிமைகளை குறைக்கும் முறைகளை உடனே நிறுத்தி விடும்படி இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகின்றது. என்ற தீர்மானத்தை ஸ்ரீமான். ஜீ. ராமச்சந்திர நாயுடு பிரேரேபித்துப் பேச ஆரம்பித்தார்.

ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர் கல்பாத்தி தெருவில்நடப்பதை பிராமணரல்லாதார் ஆக்ஷேபிக்கவில்லை என்றும் பிராமணரல்லாதாரையும் சேர்த்து தீர்மானத்தில் எழுதியிருப்பது வேண்டுமென்றே விஷமத்திற்காக எழுதப்பட்டதென்றும் ஆகையால் பிராமணர் என்பதை வைத்துக்கொண்டு பிராமணரல்லாதார் என்பதை எடுத்துவிடவேண்டும் என்றும் இல்லாவிட்டால் இத்தீர்மானத்தை ஆக்ஷேபிக்கநேரிடுமென்றும் சொன்னார் அக்கிராசனர் அசல் தீர்மானத்தையே அந்தப்படி திருத்தியாய் விட்டதென்றும் திருத்தப்பட்டதீர்மானத்தையே பிரேரேபிக்கும்படியும் சொன்னார். திருத்தப்பட்டபடி பிரேரேபித்து ஸ்ரீமான் ஜி.ராமச்சந்திர நாயுடு பேசியதாவது. முப்பது கோடி ஜனங்களில் ஏழுகோடிஜனங்களை தீண்டாதாரரென்பது எவ்வளவு அக்கிரமம்! இவ்வேழைமக்களை தெருவில் நடக்கவொட்டாமல் நாய்களுக்கும் கேவலமாய் நடத்தக்கூடிய வகுப்பு மிகவும் இழிந்த வகுப்பேயாகும். இந்து சமயத்தின்பேரால் இக்கொடுமைசெய்வது மிகவும் அக்கிரமமாகும். வைக்கத்தில் இவ்வித அக்கிரமத்தை ஒழித்த ரீஜண்ட் மகாராணியாருக்கு மிகவும் வந்தனத்தைச் செலுத்துகிறோம். ஆப்பிரிக்காவில் இந்தியர்களை வெள்ளையர்கள் துன்புறுத்தப்படுவதாக கூறும்பிராமணர்களுக்கு தாங்கள் இந்நாட்டில் செய்யும் கொடுமை அவர்கள் புத்தியில் படாமல் போனது என்ன ஞாயம்? தீண்டாமை உள்ளவரையில் சுயராச்சியப்பேச்சு பேசுவது ஏழைமக்களை ஏமாற்றும் மோசமேயாகும் என்று சொன்னார்.

பின்னர் ஸ்ரீமான். சிங்காரவேலு செட்டியார் ஆமோதிக்கையில் பிராமணர்கள் பிராமணரல்லாத இந்துக்களில்ச்சிலரை தெருக்களில் நடக்க அனுமதிக்காதது பெருத்த அக்கிரமமேயாகும். இவர்களுள்ள வரையும் நம் நாடு முன்னேற்றமடையாது

(தொடர்ச்சி 8-வது பக்கம் பார்க்க.)



அணைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவற்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சகம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு.

குரோதன-௵ கார்த்திகை-மீ ௧௪-உ

# காஞ்சீபுரம் மகா நாடுகள்.

காஞ்சீபுரத்தில் ராஜீய மாகாநாடென்று ஒரு மகாநாடு கூடிக் கலைந்தது. பெயர் ராஜீய மகா நாடென்று சொல்லிக் கொள்ளப் பட்டாலும் அஃதொரு சூதாட்ட மகா நாடாகவே முடிந்தது. சூதாட்டமாட நன்கு தெரிந்தவர்கள் நல்ல லாபமடைந்தார்கள். அது தெரியாதவர்கள் லாபமடையவில்லை. சூதாட்டத்தினால் சம்பாதித்த பொருள் எவ்வளவு காலம் நிற்கு மென்பதையும் இச்சூதின் தன்மையை பொதுஜனங்கள் அறிந்து கொண்டால் பிறகு இவர்கள் யோக்கியதை என்னகு மென்பதையும் இச்சூதாட்டக்காரர்கள் அறியாமல் போனது அவர்களுடைய பொல்லாத காலமேயல்லாமல் மற்றபடி யாருக்கும் ஒன்றும் நஷ்டமாய்ப் போய்விடவில்லை.

## தலைமை உபந்யாசங்கள்.

உபசாரணைத் தலைவர் ஸ்ரீமான். முத்துரங்க முதலியார் வாசித்த வரவேற்பு பிரசங்கம் அவரெழுதியதல்ல வென்றும் அவர் கருத்தல்ல வென்றும், அவர் வாசிக்கும் பொழுது கேட்டுக் கொண்டிருந்தவர்களுக்கெல்லாம் நன்றாய் விளங்கியிருக்கும். எவரோ ஒரு பிராமணர் தன்னிஷ்டம்போல் பிராமணரல்லதாரை நன்றாய் வைது எழுதி அவர் கையில் கொடுத்து அவரை வாசிக்கச் சொல்லி அதை கேட்டுக் கொண்டிருந்தவர்களெல்லாம் ஐயோ பாவம்! அவரை வையும் படியும், அவரைத் தலைகுனியும் படியும் செய்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தது பிராமண சூழ்ச்சிக்கு ஒரு உதாரணமாய் விளங்கிற்று. இந்த பிரசங்கத்தில் சில பாகத்துக்காக ஸ்ரீமான். முதலியார் பேரில் பலர் கொண்டுவந்த கண்டனத் தீர்மானங்களையும் நிறுத்திக்கொள்ளும்படி சொன்னதற்கு இந்த சமாதானம் தான் சொல்லப்பட்டது. அதாவது இந்த உபன்யாசம் அவர் எழுதியது அல்லவென்றும் இதற்காக பிறகு அவரே வருத்தப்பட்டார் என்றும் ஆதலால் கண்டனம் வேண்டியதில்லை என்றும் சில முக்கியஸ்தர்களால் சொல்லி நிறுத்திவிடப்பட்டது ஆதலால் அதைப்பற்றி ஆராய்வது வீண்வேலையானாலும் அதில் பிராமணர் பிராமணரல்லாதாரிணக்கு காங்கிரசில் இருப்பதாய் ஒப்புக் கொண்டது மாத்திரம் குறிப்பிடத் தக்கது:—

## மகாநாட்டுத் தலைவர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியார், உபன்யாசம்.

இது 20 பக்கம் கொண்டது இவற்றில் ஏறக்குறைய 10 பக்கம் தமிழ் நாட்டின் பெருமையைக் காட்டு முகத்தான் தனது கல்விப் பெருமையைக் காட்ட புராணங்களின் நாட்டுப் படமாய் உபயோகித்துக் கொள்ளப்பட்டது. அதின் பாஷையைப் பற்றியோவென்றால் கேழ்ப்போர் ஸ்ரீமான். முதலியார் என்ன பாஷையில் படிக்கிறார் என்று கவனித்து அறியாமலிருக்கும்படியான அவ்வளவு சாமர்த்தியமாயிருந்தது. கருத்தைப் பற்றியோவென்றால் "முன்னால் பார்த்தால் நாயக்கர் குதிரைபோல் இருக்கிறது பின்னால் பார்த்தால் அய்யங்கார் குதிரைபோலிருக்கிறது" என்கிற பழமொழிப்படி குள்ளநரி சாக்ஷியாய் இருந்தது. கண்ணோக்கமோ எப்படி நடந்துகொண்டால் பிராமணர் பிராமணரல்லாதார் இரண்டு பேரையும் ஏமாற்றலாம் என்கிற தத்துவத்திலேயே இருந்தது.

சென்னையில் ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரின் கூட்டம் ஸ்ரீமான். ஆரியாவை அடித்துத் துன்புறுத்திய பிறகு நமது முதலியாரின் கதி ஸ்ரீமான். அய்யங்காரைக்கண்டால் நடுங்கவேண்டியதாய்ப் போய்விட்டது.

ஸ்ரீமான். முதலியார் அவர்கள், தான் பயங்காளி என்றும், தான் ஒரு பெண் ஆத்மா என்றும், ஆண் ஆத்மா அல்ல வென்றும் அடிக்கடி ஒளிக்காமல் சொல்லிக் கொள்வதுண்டு. அதை காஞ்சியின் தலைமைப் பதவியில் நன்றாய் காட்டி விட்டார். இவ்வித சந்தேகம் சிலருக்கு முன்னமேயேயிருந்திருந்தாலும், இவ்வளவு மோசமாய் கொல்லை வழியில் புகுவாரென்று அவர்கள் நினைக்கவே யில்லை. ஸ்ரீமான். முதலியார் தலைவராய் வீற்றிருந்த ஸ்தானத்தில் ஒரு அய்யங்காரோ, ஆச்சாரியாரோ வீற்றிருப்பார்களானால், இவ்வளவு அக்கிரமம் செய்ய அவர்களுக்கு சவுகரியம் கிடைத்திருக்காது ஸ்ரீமான். முதலியார் தலைவராயிருந்ததால் பயங்காளித்தனத்தோடு ஒரு அய்யங்கார் கையிலும் ஒரு ஆச்சாரியார் கையிலும் குழந்தை போல் உட்கார்ந்து கொண்டதால் அவர்கள் தங்கள் இஷ்டப்படி முதலியாரை உபயோகப்படுத்திக் கொண்டு சூதில் ஜயித்து விட்டதாக நினைத்துக் கொண்டார்கள். இந்த சூது முதலியார் பெயரைக் கெடுக்கத்தான் அய்யங்கார், ஆச்சாரியார் முதலியோருக்கு உபயோகப்பட்டதேயொழிய சூது ஆடிகளுக்கு பெரிய லாபம் ஒன்றும் ஏற்பட்டு விடவில்லை ஆனால் ஒன்று முதலியார், நாயுடு, நாயக்கர் என்கிற மூவரின் ஒற்றுமையைக் கெடுக்கவும் (நாயக்கருக்கு யோக்கியதை இல்லா விட்டாலும்) முதலியார், நாயுடு, இவர்கள் ஆச்சாரியார் அய்யங்கார் இவர்களுக்கு நல்லபிள்ளைகளாய் நடக்க போட்டி போடவும் உபயோகப்பட்டது. எப்படி இருந்தபோதிலும் ராஜீய மகா நாடுகள் என்பது ஒரு வகுப்பாரை ஏமாற்றி ஒரு வகுப்பார் ஆதிக்கம் பெறத்தான் உபயோகப்படக் கூடிய நிலைமையில் இருக்கிறதே அல்லாமல் விடுதலைக்கு இல்லை என்பது உறுதியாய் விட்டது. பாமர ஜனங்களை யார் ஏமாற்றுவது என்பது தான் மகா நாடுகளின் பெரிய கொள்கைகளாய்விட்டது. இனி தேசத்துக்கு உண்மையாய் உழைக்கிறவர்கள் காங்கிரஸ் நிர்வாகத்தில் இருக்க வேண்டிய அவசியமே இல்லை. நாலணா மெம்பராய் மாத்திரம் இருந்துகாங்கிரஸில்நடைபெறும் சூழ்ச்சிகளையும், புரட்டுகளையும் வெளியில் சொல்லிக் கொண்டிருந்தால் போதும். எந்தக்காரணத்தை முன்னிட்டும் இனி தேசத்தில் எந்தக் கட்சிக்காவது எந்தத் தலைவர்களுக்காவது சமீபத்தில் பொதுமதிப்புஏற்பட்டுஉபயோகமான எந்தகாரியமும் செய்யப்போவதில்லை என்பது மட்டும் உறுதியாய் விட்டது. வேண்டுமானால் தனிப்பட்ட மனிதர்களுக்கு தங்களுக்குள்ள பிறரை ஏமாற்றக் கூடிய சக்தியினாலும் சவுகரியத்தினாலும் பணத்தை வாரி தாராளமாய் இரைப்பதனாலும் ஜெயம் கிடைத்தால் கிடைக்கலாம் வரப்போகும்தேர்தல்களிலும்பணச்செலவும் லஞ்சமும் கொடுத்து ஓட்டுவாங்குவதுமான காரியங்கள் தான் அநேகமாய் வெற்றி கொடுக்கப் போகிறது. இவர்களின் பாக்கியவசமாக நாட்டில் தொண்டர்கள் காங்கிரஸ் வேலைக்காரர்கள் என்று ஒரு கூட்டத்தார் ஒத்துழையாமை வேகத்தின்போது ஆவேசத்தில் ஜெயிலுக்குப் போயும் தங்கள் தொழிலை விட்டு காங்கிரசுக்கு உழைத்து வந்தும் இப்போது ஒத்துழையாமை அடங்கிவிட்டதாலும் தியாகமும் காங்கிரசுக்குஊக்கமானவேலையும்தேவையில்லாததாலும் பலர்வயிற்றுக்கில்லாமலும், தொழில் இல்லாமலும் சும்மா திரிகிறார்கள். இக்கூட்டம் தான், வரப்போகும் சட்டசபை முதலிய (எலக்ஷன்) தேர்தல் யுத்தத்திற்கு சேனைகளாகஉபயோகப்படப்போகிறார்கள். இவர்களுடைய தைரியத்தினால் பணக்கொழுப்புள்ள அநேக தற்குறிகள் தேர்தலுக்கு நின்றுவெற்றிபெறப்போகின்றதுகள். இதுதான் மகாநாட்டுவைபவம். தொண்டர் மகாநாட்டைப்பற்றியும் வகுப்புவாரி பிரதிநிதித்தீர்மானத்தைப்பற்றியும் காஞ்சி மகாநாடுகளின் மற்றும் பல விஷயங்களையும் பின்னர் எழுதுவோம்,

# காஞ்சீபுரம் பிராமணரல்லாதார் மகா நாடு.

குடிஅரசுப்பத்திரிகைமூலம் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் காஞ்சீபுரத்தில் பிராமணரல்லாதார் மகாநாடொன்று கூட்ட வேண்டுமாயும் அதற்கெல்லா பிராமணரல்லாத தலைவர்களும் வரவேண்டுமென்றும் கேட்டுக்கொண்டதற்கிணங்க, தமிழ்நாட்டிலுள்ள பொது நோக்குடைய பிராமணரல்லாத தலைவர்கள் அனைவரும் தவராது விஜயம் செய்திருந்தனர். சனிக்கிழமை மாலை 5½ மணிக்கு காஞ்சி காமாட்சி அம்மன் கொட்டகையில் தமிழ்மாகாண பிராமணரல்லாதார் மகா நாடு நடைபெற்றது. இந்த மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களில் முதன்மையானவர்கள்: ஸ்ரீமான்கள். ஈ. வெ. ராமசாமி நாயக்கா, வி. ஆர். ரெட்டி, ஆர். கே. சண்முகம் செட்டியார், டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு, டி. ஏ. ராமலிங்கம் செட்டியார், எஸ். ராமனுதன், எஸ். முத்தையா முதலியார், எம். ராமபத்திர உடையார், பு. ம. ஆதிகேசவலு நாய்க்கர், எஸ். சாமிநாதச் செட்டியார், எம். சிங்காரவேலு செட்டியார், ஜே. எஸ். கண்ணப்பர், என். தண்டபாணி பிள்ளை, டி. பி. மீனாட்சிசுந்தரம் பிள்ளை, வி. சக்கரை செட்டியார், இ. கே. மேனன், ஓ. கந்தசாமி செட்டியார், ஜெயவேலு, ஷாபிமகமத், அமீத்கான், வி. வி. நாயுடு, சாமி வெங்கிடாசலம் செட்டியார், வெங்கிடகிருஷ்ணபிள்ளை இன்னும் பல காங்கிரஸ் பிரதிநிதிகளும் உள்ளூர் மகாஜனங்களும் விஜயம் செய்திருந்தார்கள். மகாநாட்டை நடக்கவிடாதபடி குழப்பம் விளைவிப்பதற்காக சுயராஜ்யக்கட்சி பிராமணர்களால் ஏவப்பட்ட சில பிராமணரல்லாதார்களும் பல பிராமணர்களும் வந்திருந்தார்கள். ஸ்ரீமதி. ஜனகத்தம்மாளால் கடவுள் துதி செய்யப்பட்டு மகாநாடு துவக்கப்பெற்றது.

இந்த மகாநாட்டுக்கு ஸ்ரீமான். டி. ஏ. ராமலிங்கஞ் செட்டியார் அவர்கள் தலைமை வகிக்க வேண்டுமென்று பிரேரேபித்து ஸ்ரீமான். ஈ. வெ. ராமசாமி நாயக்கர் பேசியதாவது:—

இன்று தினம் பிராமணரல்லாதாராகிய நாம் எல்லோரும் இங்கு கூடியிருக்கிறோம். இத்தகைய பெரிய மகாநாடு எதன் பொருட்டு கூட்டப்பட்டதென்பது பற்றியும் இதில் என்னென்ன விஷயங்களைக் குறித்து ஆலோசிக்கப்படும் என்பதைப் பற்றியும் அறிந்து கொள்ள இங்கு கூடியுள்ள பலரும் அவாக் கொண்டிருக்கக் கூடும். இம்மகாநாடு எந்த வகுப்பாரிடத்தும் அதிருப்தியாவது துவேஷமாவது காரணமாகக் கொண்டு கூட்டப்பட்டதன்று. தேசவிடுதலைக்காக ராஜீய விஷயத்தில் நமது நிலைமையைத் தெளிவாக்கி ஒரு திட்டம் நமக்கென அமைத்துக் கொள்வது நியாயமேயாம். நம்முடைய உரிமைகளையும் நன்மைகளையும் பாதுகாத்துக்கொள்ளவேண்டுவதன் நிமித்தம் இத்தகைய மகா நாடுகள் கூட்ட வேண்டியது அத்தியாவசியமென்றேற்படுகின்றது. இதுபோன்ற மகா நாடுகள் சென்ற ஐந்தாறு ஆண்டுகளாக மாகாண மகாநாடும் காங்கிரசும் கூடும்போது அவ்வவ்விடத்திலேயோ பிறிதோறிடத்திலேயோ கூட்டப்படுவது வழக்கமாய் வருகிறது. இத்தகைய மகாநாடுகளில் நமது முன்னேற்றத்திற்கான வழிகளைக்குறித்து ஆலோசித்து முடிவுசெய்ய வேண்டுவது முதற்செய்யவேண்டிய வேலைகளில் முக்கியமானதாகிறது. தேசத்தில் பிராமணர் பிராமணரல்லாதார் என்றதனிப்பட்ட கட்சிகள் தோன்றிபிணக்குறுவது அனைவரும் அறிந்த ஒரு விஷயமேயாகும். இவ்வாறு பிரிவினைகள் இல்லையென்று எவ்வளவுதான் மூடிவைத்தபோதிலும் காங்கிரசிலும்கூட இத்தகைய பேதமுண்டென்பதை யாரும் மறுக்கமுடியாது. இதனை வரவேற்புச்சபைத்தலைவர் பிரசங்கத்திலும் தலைவர் பிரசங்கத்திலும் எடுத்துக்காட்டியிருக்கிறார்கள். பிராமணர் பிராமணரல்லாதாரென்னும் பிரிவினை இல்லையென்பது உடலிலுள்ள புண்ணை மூடிவைத்து அழுகவிடுவதற்கொப்பாகும். அதற்கேற்ற பரிகாரம் செய்து உடல் நலத்தைக் கெடுக்கும் புண்ணை ஆற்றமுயலுவதே பொது நோக்குடைய அறிஞர் கடமையாகும். இத்தகைய பிரிவேற்பட்டுள்ளதால் பிராமணரல்லாதாரின் முன்னேற்றத்திற்கான விஷயங்களைக்குறித்து ஆலோசிக்கப்படவேண்டுவது ஒவ்வொரு பிராமணரல்லாத மக்களின் கடமை என்பதை நான் எடுத்துச்சொல்லவேண்டியதில்லை. லக்னோ ஒப்பந்தத்தின் மூலமாக முகம்மதியர்களுக்குத் தனிப்பிரதிநிதித்துவமளிக்கப்பட்டதன் பலனாக அங்கே இந்து முஸ்லீம் வேற்றுமை பெரிதும் ஒழிந்து ஒற்றுமைக்கு இடமேற்பட்டது. அது போன்றே நமது உரிமைகளைப்பாதுகாத்து நாம் முன்னேற்றமடைவதற்கான மார்க்கம் இன்னதென தெளிவாக்குவதன் பொருட்டே இப்பெருங்கூட்டம் கூட்டப்பட்டிருக்கின்றது. இக்கூட்டத்தைச்செவ்வனே நடத்திவைக்க ஸ்ரீமான். ராமலிங்கஞ் செட்டியாரை தலைமை வகிக்கக் கேட்டுக் கொள்கிறேனென்று தமது உரையை நிறுத்தினர். ஸ்ரீமான் சக்கரைச் செட்டியார் இத்தீர்மானத்தை ஆமோதித்தார். நீண்டகரகோஷத்தினிடையே ஸ்ரீமான் ராமலிங்கஞ் செட்டியார் அக்கிராசனம் வகித்தார்.

## ஸ்ரீமான் ராமலிங்கஞ் செட்டியார்

தலைமை வகித்து பேசியதாவது:— இக்கூட்டத்தில் இன்னவிஷயத்தைப்பற்றி முடிவு செய்வது என்பது இனிமேல் தான் பேசி முடிவு செய்யவேண்டியிருக்கிறது. முன்னர் நான் காங்கிரசில் சேர்ந்து உழைத்து வந்தேனுகிலும் கொஞ்சகாலமாக காங்கிரசில் அதிக சம்பந்தம் வைத்துக் கொள்ளவில்லை யாதலால் உங்கள் கருத்து இன்னதென்பதை இனித்தான் தெரிந்து கொள்ள வேண்டியவனாக இருக்கிறேன்.

நமது நாட்டில் எப்படியோ மேல் கீழ் என்ற வித்தியாசத்தினால் ஒரு ஜாதியார் மாத்திரம் முன்னேற்ற மடைந்து மற்ற ஜாதியார் பின்னடைந்திருக்கிறார்கள் என்பதை யாரும் மறுக்க முடியாது. பின்னடைந்தவர்கள் சமத்தும் அடையவேண்டுமென்று முயல்வது இயற்கை. உதாரணமாக மகமதியர் கிருஸ்தவர் முதலியவர்கள் தங்கள் முன்னேற்றத்திற்கு முயன்று தங்களுக்கென பிரதிநிதித்துவமும் பெற்று இருக்கிறார்கள். ஆகையால் இன்று கூடும் ராஜீய விஷயாலோசனைக்கூட்டத்திற்கு இங்கிருந்து ஏதாவது ஒரு தீர்மானத்தை கொண்டுபோய் நிறைவேற்ற வேண்டுமென்றிருந்தால் அதனை இங்குள்ளவர்கள் யோசித்து முடிவு செய்யவேண்டும். மற்றும் ஏதாவது முற்போக்குக்கு ஏற்ற பொதுத்தீர்மானங்கள் வேண்டியிருந்தாலும் அதைப் பற்றியும் யோசிப்பீர்கள் என்று நம்புகிறேனென்று பேசிமுடித்தார்.

## ஸ்ரீமான் எஸ். ராமநாதன்

பின்னர் ஸ்ரீமான் ராமநாதன் அவர்கள் எழுந்து தமிழ் நாட்டிலாவது நமது தேசத்தில் மற்றும்பல முக்கிய மாகாணங்களிலாவது காங்கிரசிலாவது பிராமணர் பிராமணரல்லாதார் தீண்டாதார் என்கிற வகுப்பு வேறுபாடு இல்லையென்று யாரும் மறுக்க முடியாது.

வடநாட்டில் இந்துமுஸ்லீம் வேற்றுமையால் சுயராஜ்ய மடையமுடியாமல்இருப்பது போலவே தென்னாட்டில் பிராமணர் பிராமணரல்லாதார் வேற்றுமை விடுதலைக்குத் தடையாயிருக்கிறது. இத்தடையை எப்படி நீக்குவதென்பதற்கே இங்கு நாம் கூடியிருக்கிறோம். இதைப் பற்றி காங்கிரஸ் பிராமணரல்லாதார் எல்லோருக்கும் இந்த வேற்றுமை எண்ணம் இருந்தபோதிலும் சிலர் தைரியமாய் வெளியிடப்பயப்படுகிறார்கள். காங்கிரசில் இல்லாமல் ஒதுங்கி நிற்பவர்களுக்குள்ளும் இந்த எண்ணம் பலப்பட்டு வருவதை நான் சொல்லவேண்டியதில்லை. இவற்றை ஒழிப்பதற்கு என்ன செய்ய வேண்டும் என்பதைப்பற்றி யோசித்து ஒரு தீர்மானம் செய்து அதை ராஜீயமகாநாட்டின் ஆலோசனைக்கு கொண்டுவரவேண்டும். இந்த ராஜீய மகா நாட்டில் வெற்றி பெற்றாலும் சரி தோல்வியுற்றாலும் சரி இவ்விஷயத்தை தெரிவிக்கவேண்டிய முக்கிய சந்தர்ப்பம் இப்போது இது என்பது எனதபிப்பிராயம். பிராமணரல்லாதார் நன்மையை நாடும் இவ்வியக்கம் ஆதி முதற்கொண்டே பல நூராண்டுகளுக்கு முன்னரே முளைத்து இருக்கிறது. ஆனாலும், டாக்டர் நாயர், அவர்களால் சமீபத்தில்தான் உரமிடப்பட்டு வேரூன்றி கப்பும் கவருமாய் வளர்ந்து வருகிறது இவவகுப்பு வேற்றுமை நோயை அடியோடு ஒழிக்க வேண்டுமானால் அவ்வவ்வகுப்புக்கு உள்ள உரிமையை அவரவர்களுக்கு கொடுப்பது என்னும் மூலிகையால் அல்லாது வேறு என்ன மருந்து கொடுத்தா

(தொடர்ச்சி 2-வது பக்கம் பார்க்க)

(5-வது பக்கம் தொடர்ச்சி.)

இந்த மூட பிராமணத்துவம் ஒழிந்தால் தான் சுயராச்சியம் கிடைக்கும். பிராமணர்களை நாம் கேட்டுக்கொள்வதெல்லாம் ஜாதி கௌர்வத்தை விட்டு விடுங்களென்பது தான். ஜப்பானில் ஜாதி கௌர்வம் ஒழிந்து தீண்டாமை ஒழிக்கப்பட்டதினால் தான் அந்நாடு முன்னேற்ற மடைந்தது. பிராமணர்கள் தங்களுடைய வகுப்பு அகம்பாவத்தை விட்டு விட்டாலன்றி, நாட்டின் அடிமைத்தனம் நீங்காது. ஓ பிராமணர்களே! நீங்கள் எங்களைச் சமமாய் நினைக்கிற தினமே இந்தியாவுக்கு சுயராஜ்யம் கிடைக்கும் தினமென்று திண்ணமாய்ச் சொல்லுகிறேன் என்று பேசி முடித்தார்.

### ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியார்.

பிறகு ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியார் இத்தீர்மானத்தை எதிர்த்தார். அவர் எதிர்க்கும் போது தீண்டாமை ஒழிக்க வேண்டுமென்று காங்கிரசில் பேசுவது ஒழுங்காகாது காங்கிரஸ் ராஜீய விஷயத்திற்காகத் தான் ஏற்பட்டது. கல்ப்பாத்தியில் பிராமணர்கள் மாத்திரம் குடியிருக்க வில்லை பிராமணரல்லாதாரும் சிலரிருக்கிறார்கள். (சுவாமி கீதாநந்தர் இதை யாரும் நம்பாதீர்கள் அங்கு பிராமணர் மாத்திரம் தான் குடியிருக்கிறார்களென்று சொன்னார்) கல்ப்பாத்தியில் என்ன நடந்ததென்பதை இங்குள்ளார் யாராகிலும் நேரில் பார்த்ததுண்டா? அப்படியிருக்க அதைப் பற்றி இந்த மேடையிலும் பேசுவது ஞாயமாகுமா? சநாதன தர்மத்தில் நம்பிக்கையுள்ளவர்கள் இந்த தீர்மானத்திற்கு ஓட்டுக் கொடுக்கப்படாது என்று சொன்னார்.

### ஸ்ரீமரன். கலியாணசுந்தர முதலியார்.

பிறகு தலைவர் ஸ்ரீமான். கலியாணசுந்தர முதலியார் இத்தீர்மானத்தின் பேரில் அநேகம் பேர் பேசவிரும்புகிறார்களென்றும் இனி இரண்டு பேரைத்தான் பேசவிட முடியுமென்றும் அதுவும், ஸ்ரீமான்கள். வரதராஜுலு நாயுடுவையும் ஒ. கந்தசாமி செட்டியாரையும் தான் பேச அனுமதிக்க முடியுமென்றும் சொன்னார். கூட்டத்திலிருந்தவர்கள் ஸ்ரீமான்கள். ஆரியா, சுவாமி கீதா நந்தர், இராமசாமி நாயக்கர் இவர்கள் பேசவேண்டுமென்று சொன்னார்கள். ஆரியா அவர்கள் தான் பேச வேண்டுமென்று எழுந்தார் அக்கிராசனாதிபதி ஒப்புக்கொள்ளமாட்டேனென்று சொல்லிவிட்டார்.

### ஸ்ரீமான். வரதராஜுலு நாயுடு.

ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடு தீர்மானத்தை ஆதரித்துப் பேசியபோது ஸ்ரீமான் எம். கே. ஆச்சாரியார் இந்த தீர்மானத்தை எதிர்ப்பது அதிசயமல்லவென்றும் காங்கிரஸ் சீர்திருத்தத்தில் பிரவேசிக்கலாமா என்பது புதிதான கேள்வி அல்லவென்றும், பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லையென்பதை மகாத்மாவும் சமீபத்தில் விளக்கிவிட்டாரென்றும் திருச்சிக்கூட்டமும் அதைத் தெளிவுபடுத்திவிட்டதென்றும் மகாத்மாவுக்கு சிலர் கடிதமெழுதியும் அது பலிக்கவில்லையென்றும் இந்திய சமூகத்தில் அனைவரும் சமமாய் இருக்கவேண்டுமென்பதேகாங்கிரஸின் கொள்கையென்றும் மனிதசமூகத்தில் ஒருவருக்கொருவர் உயர்வு தாழ்வு கற்பிப்பது பைசாசக் கொள்கை என்றும் தெருவில் நடக்க சுதந்தரம் கேழ்ப்பது காங்கிரஸுக்கு விரோதமென்று சொன்னால் சுயராஜ்யம் கேழ்க்கும் யோக்கியதை சாங்கிரஸுக்கு இல்லை யென்றே சொல்லுவேன் என்று பேசி முடித்தார்.

### ஸ்ரீமான். ஜெயவேலு.

தங்களுடையை நிலைமை மிகவும் கொடுமையாயிருக்கிறதென்றும் தாங்கள் கொடுமைப்படுத்தப் படுவதற்குக் காரணம் பிராமணர்கள்பிராமணரல்லாதார்கள் இருவரும் தானென்றும் ஸ்ரீமான் ஆச்சாரியார் போன்றவர்கள் தீண்டாமை ஒழியவேண்டுமென்று வாயளவில்ப் பேசிவிட்டு தீர்மானம் சபைகளில் வரும்போது ஆக்ஷேபிப்பது பெரிய வேஷமாயிருக்கிறதென்றும் இம்மாதிரி எங்களுக்கு வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாவிட்டாலும் கோவில்களில் சுவாமியை தரிசிக்கவும் தெருவில் நடக்கவும் சுதந்தரம் கொடுத்தால்போது மென்றும் சொல்லி ஆதரித்தார்.

ஸ்ரீமான். ஒ. கந்தசாமி செட்டியார் அவர்களைப்பேசும்படி அக்கிராசனர் அழைத்தார் அவரும் வந்தார் அது சமயம் சபையிலிருந்தோர் கந்தசாமி செட்டியார் காங்கிரசில் சேர்ந்தவரல்லவென்றும் சீமைத்துணிகட்டிக்கொண்டிருக்கிறாரென்றும் ஸ்ரீமான்கள் இராமசாமி நாயக்கரையும் ஆரியாவையும் பேச வேண்டாமென்று சொல்லிவிட்டு இவரைப் பேசும்படிச் சொல்வது தகுமாவென்றும் கேட்டார்கள். ஸ்ரீமான். கலியாணசுந்தர முதலியார் அது தம்முடையஇஷ்டமென்று சொல்லிவிட்டு கந்தசாமி செட்டியாரையே பேசும்படிச்சொன்னார்.

### ஸ்ரீமான். கந்தசாமி செட்டியார்.

ஸ்ரீமான். கந்தசாமி செட்டியார் எழுந்து உதவி இந்தியா மந்திரியாக இருந்த விண்டர்டன் பிரபு ஸ்பெக்டேடர் என்ற பத்திரிகையில் இந்தியா சுயராஜ்யமடைவதற்குத்தடையாயுள்ளவற்றை எடுத்துக்காட்டி எழுதியவியாசமொன்றில் அவர்கள் (இந்தியர்கள்) ஒருவரையொருவர் கொன்று தின்றுவிடக்கூடிய மாதிரியில் அவ்வளவு ஜாதி வித்தியாசத்தால் ஒற்றுமையற்று வாழ்கிறார்கள் என்று எழுதியிருக்கிறார். ஸ்ரீமான். எம். கே. ஆச்சாரியார் சொல்வதைப்பார்த்தால் கிட்டத்தில் வரும் சுயராஜ்யம்கூட தூரத்தில் ஓடி விடும்போல் தெரிகிறது. ஜஸ்டிஸ் கட்சியார் தீண்டாமை விலக்க வேலை செய்திருக்கிறார்கள் டாக்டர் நாயர் எழுதிவந்த யோசனைகளினால் தான் காங்கிரசில் தீண்டாமை ஒழிக்க மகாத்மா ஏற்பாடு செய்தார் வைக்கத்தில் செய்த சத்தியாக்கிரகத்தைக் கல்ப்பாத்தியிலும் செய்ய வேண்டும் நானும் அதற்குத் தயாராய் வருகின்றேன் பிராமணரல்லாதார் வீட்டில் சமயல் வேலையில் இருந்தவர்களும், காப்பி கடைகளில் வேலை செய்தவர்களும் பணம் சம்பாதித்துக்கொண்டுபோய் கல்ப்பாத்தியில் வீடுகட்டிக்கொண்டு இப்போது தெருவில் நடக்கவேண்டாம் என்கிறார்கள். பட்டணங்களில் இவர்கள் எப்படி நடந்துகொள்ளுகிறார்கள்? காப்பி ஓட்டல்களில் எப்படி எச்சில் கழுவுகிறார்கள்? இதையெல்லாம் மறந்து விட்டு கல்ப்பாத்தியில் அதிகாரம் செய்கிறார்கள் இவர்கள் உள்ளவரை சுயராஜ்யம் கிடைக்காது என்று சொன்னார்.

### சுவாமி கீதாநந்தர்.

பிறகு சுவாமி கீதாநந்தர் ஆவேசத்துடன் எழுந்து தான் பாலக்காட்டு பிராமணன் ஆகையால் அவர்கள் அக்கிரமம் நன்றாய்த்தெரியுமென்றும் கல்ப்பாத்தியில் கள் குடிக்கிற பிராமணரும் இருக்கிறார்கள் என்றும் அன்னிய மதஸ்த்தர்களான மகமதியர் கிருஸ்த்தவர் முதலியோர் எச்சில் துப்புவதின் மேல் தான் பிராமணர்கள் நடக்கிறார்கள் என்றும் அங்குள்ள பிராமணர்களைச் சண்டாளர் என்றும் பிரம்மராக்ஷசர்கள் என்று தான் சொல்வேன் என்றும் எல்லா சண்டாளத்துவத்தையும் தங்களிடம் வைத்துக்கொண்டு பராசர் சொன்னார் மனு சொன்னார் நாரதர் சொன்னார் என்று ஜனங்களை ஏமாற்றுகிற அறிவீனர்கள் என்றும் கிரமமாய்ப் பார்த்தால் பிராமணர்களை தெருவில் விடக்கூடாது என்றும் சொல்லி வருகையில் தலைவர் மணியடித்து மேலே பேசவொட்டாமல் உட்காரச்செய்துவிட்டார். பிறகு தீர்மானம் நிறைவேறிற்று.

பிறகு சேவாதளத்தைப்பற்றியும் கிராமநிர்மாண வேலைகளைப்பற்றியும் இந்திபாஷையைப்பற்றியும்தீர்மானங்கள்செய்துவிட்டு சிரியாவில் டமாஸ்கஸ் என்ற பட்டணத்தில் பிரஞ்சுக்காரர் முஸ்லீம்களுக்கு செய்யும் கொடுமையையும் பிரஞ்சுக்காரர்கள் ரிப்புகளை அடக்கச்செய்யும் கொடுமைகளையும் எகிப்பதுவாசிகளின் சுயேச்சை உழைப்பை பிரிட்டிஷார் எதிர்ப்பதையும் கண்டித்து அதற்குபரிகாரமாக பிரஞ்சு சாமான்களையும் பிரஞ்சு வியாபாரத்தையும் பஹிஷ்கரிக்க வேண்டுமென்றும் மற்றும் இதுகளுக்கு உதவி செய்ய திரவியச்சகாயம் செய்ய வேண்டுமென்றும் காங்கிரஸ் கிலாபத்ஸ்தாபனங்கள் பணம்வசூல்செய்து ஹக்கீம் அஜ்மல்கான் சாயபுக்கு அனுப்பிக்கொடுக்க வேண்டும் என்றும் தீர்மானங்கள் நிறைவேறியன.

### வகுப்புவாரிப் பிரதிநிதித் தீர்மானம்.

இவை முடிந்தவுடன் தலைவரால் வகுப்புவாரி பிரதிநிதித்தீர்மானம் எடுத்துக் கொள்ளப்பட்டது. அது வருமாறு தேசிய முன்னேற்றத்திற்கு இந்து சமூகத்தாருக்குள் பற்பல ஜாதியாருக்குள்ளும் பரஸ்பர நம்பிக்கையும் துவேஷமின்மையும் ஏற்படவேண்டுமாகையால் ராஜீய சபைகளிலும் பொதுஸ்தாபனங்களிலும் பிராமணர், பிராமணரல்லாதார், தீண்டாதார், என்கருதப்படும் இம்மூன்று பிரிவினருக்கும் தனித்தனியாக ஜனத்தொகை விழுக்காடு தங்கள் தங்கள் சமூகத்தில் இருந்து பிரதிநிதிகள் தேர்ந்தெடுத்துக்கொள்ள உரிமை

(தொடர்ச்சி 11-வது பக்கம் பார்க்க.)

# தற்காலக் கல்வியிலுள்ள குறைகள்.

(15—11—25 ல் யின் தொடர்ச்சி)

பால்ய முதல் வேளாளர் வீடுகளுக்குள்ளேயே வளர்ந்துவரும் ஒரு வேளாளச் சிறுவனுக்கு ஏற்படும் படியான ஞானம் வேளாளத் தெருவை விட்டு வெளியில் போய் படிக்கும் சிறுவனுக்கு ஏற்படுவதில்லை. காலையில் எழுந்ததும் எரு சேகரிப்பது, நீர் பாய்ச்சுவது, மாடுகளைப் போஷிப்பது, உழுதல், பயிரிடுதல், போன்ற வேலைகளையும் சதாவும், வேளாண்மை ஒன்றைப் பற்றிய பேச்சையே கேட்டு அதிலேயே முழுகிக் கிடக்கும்படியான விசேஷ அனுபவஞானம் பட்டணத்தில் போய் "விவசாயஞானம்" என்பதே இல்லாமாமல் சில வருஷங்கள் படிப்பில் செலவிடும் மாணவனுக்கு கிட்டாமல் போய் விடுகிறது. நகரவாழ்க்கையோ சிக்கனம் என்பதே உருவாக வமைந்த ஒரு வேளாளனுக்கு முற்றிலும் மாறுபட்டதாகும். காலையில் எழுந்ததும் காபி, டீ, ஆர்ப்பாடமான வாழ்க்கை, ராஜவாழ்க்கைக்குத் தகுந்தபேச்சு, அடக்கமற்ற செலவு, தமாஷாக் காலங்கழிப்பதில் பிரியம் இவை போன்ற நாட்டுப் புறவாழ்க்கைக் கொவ்வாத காரியங்களில் பழகி அதிலேயே ஊறிவிடும் ஒரு சிறுவனுக்கு, பிறகு காலையில் எழுந்ததும் ராத்திரி சமைத்த பழைய சாதம் சாப்பிடல், அடக்கமான வாழ்க்கை. ஆடு, மாடு, பூமிகளைப் பற்றிய பேச்சுப் போன்ற நாட்டுப்புற வாழ்வு எங்ஙனம் ஒத்துக் கொள்ளும்? சோளம் விளைவே ஜீவாதாரமாயுள்ள ஒரு ஊரில் இருக்கும் குடியானவனுடைய பிள்ளையைக் கொண்டுபோய் நகரவாசத்தில் வைத்து ஹைஸ்கூல் படிப்பையும் அரிசி சாதத்தையும் கொடுப்பதே அவனை திரும்ப தன் ஊருக்குத் திரும்பி வர வேண்டாமென்று சொல்வதொக்கும். ஏனெனில், ஹைஸ்கூல் படிப்பும், அரிசிச் சாதமும் சோளம் விளையுமூருக்கு புறம்பானதாகும். இந்தியாவிலிருக்கும் எல்லா உயர்தர கலாசலைகளையும் நகர வாழ்க்கைக்கென ஆள்திரட்டும் ஏஜெண்டுகளாகவே சொல்லுவது மிகவும் பொருத்தமானதாக இருக்கும். இக்கலாசாலைகள் எவ்வளவுக் கெவ்வளவு விருத்தியாகிறதோ அவ்வளவுக் கவ்வளவு கிராமாந்தர வாழ்க்கையும், விவசாயமும் நாசமாகிக்கொண்டே வருகிறது. தவிர அற்ப அறிவு ஆபத்து என்ற பழமொழிக்கிணங்க ஓர் ஹைஸ்கூல் மாணுக்கனும் தன்னுடைய உண்மையான யோக்கியதையை நிறுத்துப் பார்த்துக்கொள்ளாமலிருப்பது மட்டுமல்லாமல் தன்யோக்கியதையை பலமடங்கு உயர்த்தி மதிக்கத்தொடங்குவதால் சாதாரண கூலிக்காரனுக இருக்கும் ஒரு ஹைஸ்கூல் மாணுக்கனும் தன்னை ஒரு ராஜதந்திர நிபுணருக்கு சமானமாக பாவித்துக் கொண்டு தன் தகப்பனுர் செய்து வந்த திரேக உழைப்பை வெறுக்கிறுனென்றுல் மற்ற பிள்ளைகளைப்பற்றிச் சொல்லுவானேன். இதனுல் தன் பிற்கால வாழ்விற்கு பொருந்தாத ஒரு சுபாவத்தையுடையவனுகிவிடுகிறுன்.

## பரிகாரம்.

இந்தியாவில் ஒரு ஹைஸ்கூலுக்கு வேண்டிய பிள்ளைகள் கொடுக்கக் கூடிய அவ்வளவு சிறிய ஜனத்தொகை கொண்ட ஒரு ஜாதி இருப்பதாகச் சொல்ல முடியாது. ஒவ்வொரு ஜாதியும் ஹைஸ்கூலுக்கு வேண்டிய பிள்ளைகளை தனக்குள் வைத்துக்கொண்டிருப்பதால் ஒவ்வொரு ஜாதிக்கும் தனியாக ஒரு ஹைஸ்கூல் ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். குறிப்பிட்ட இடத்தில் குறிப்பிட்ட ஜாதிக்கு எந்தத்தொழில் பிரதானமாய் உள்ளதோ அத்தொழிலை கட்டாயப்பாடமாகவும் அனுபவ பூர்வமாகவும் இருக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். உதாரணமாக வேளாளப் பிள்ளைகளுக்கென்று ஏற்படுத்தப்படும் ஹைஸ்கூலுடன் ஒரு தோட்டம் இணைக்கப்படல் வேண்டும். அம்மாதிரியே கைத்தொழிலாளிகளுடைய பிள்ளைகளுக்கென ஏற்படுத்தப்படும் ஒரு ஹைஸ்கூலுடன் அத்தொழிலாளிகளுடைய பிரதான கைத்தொழிலை கற்றுக் கொடுக்கும்படியான தொழிற்சாலையொன்று சகலவசதியுடன் இணைக்கப்படவேண்டும். இவ்விதமாகவே மற்ற தொழில் வர்க்கத்தைச்சேர்ந்த பிள்ளைகளுக்கு அவர்களுடைய தொழிலோடு கலந்த படிப்பை அடையவசதி ஏற்படுத்த வேண்டும். குறிப்பிட்ட ஜாதிக்கு எத்தொழில் பிரதானமோ அத்தொழிலை காலையிலெழுந்ததும் மாணவர்களை செய்யும்படி கண்டிப்பான விதி இருக்கவேண்டும். இம்மாதிரியே ஒவ்வொரு ஹைஸ்கூலைச் சேர்ந்த மாணவர்களும் அவர்களுடைய ஸ்கூலுக்கு பிரதானமாயுள்ள தொழிலைச் செய்து முடித்தபிறகே புஸ்தகம் கையிலெடுக்கவேண்டும். உதாரணமாக வேளாளரொருவர் ஸ்கூலில் வாசிக்கும் மாணவர்கள் காலையிலெழுந்ததும் காலைக்கடனை முடித்து விட்டு விவசாயத்தொழில் சம்பந்தமான உழவு, எருவிடுதல், களையெடுத்தல், பாத்திகட்டுதல் தண்ணீர் இறைத்தல் தண்ணீர் பாய்ச்சுதல் மாட்டுத்தொழுவம் சுத்திபண்ணுதல், கால் நடைகளைத்தேய்த்துக் குளிப்பாட்டுதல், மாடுகளுக்கு தண்ணீர் காட்டுதல், தீனி போடுதல், முதலிய வேலைகளை மாணவர்களை செய்யும்படி ஏற்பாடு இருக்கவேண்டும். ஒவ்வொரு மாணவனுக்கும் முதல் நாள் செய்த வேலையை மறுநாளும் செய்யும்படி இராமல் ஷை வேலைகள் மாறிக் கொண்டேவரவேண்டும். மேற்கண்ட வேலைகளை காலத்திற்கும் மாணவர் தொகைக்கும் ஏற்றவாறு பங்கிட்டுக் கொடுத்து குறிப்பிட்ட வேலையை முடித்துவிட்ட பிறகே ஸ்நானம் செய்து கொண்டு புஸ்தகம் எடுத்து பள்ளிக்கு வரவேண்டும். இதற்காக ஒரு நாளில் பாதி செலவளிந்து போனுலும் பாதகமில்லை. முற்பாதியில் தொழிலும் பிற்பாதியில் படிப்பும் ஒவ்வொரு நாளிலும் வைத்துக்கொள்ளலாம். இந்த ஸ்கூலின் விதிகளுக்குக்கட்டுப்பட்டு நடக்கவிரும்பும் வேறு தொழிலைப்பற்றிச் சேர்ந்த மாணவனையும் சேர்த்துக்கொள்ள இடமிருக்க வேண்டும். இவ்வித ஸ்கூல்கள் பட்டணங்களில் ஏற்படவே கூடாது.

ஒவ்வொரு தொழில் வருக்கத்தாரும் வசிக்கக்கூடிய கிராமங்களுக்கு மத்தியிலேயே இந்த ஸ்கூல்களை ஏற்படுத்தவேண்டும். இவ்விதம் செய்வதால் மேலே சொல்லியபடி அனுபவ பூர்வமான தொழில் ஞானமும் கல்வியும் ஒருங்கே அமையும். நாட்டுப்புறத்தில் ஸ்கூல் அமைவதால் ஆடம்பரமான நகரவாழ்க்கைக்கு இடமிராது. ஒருவரும் தங்கள் பிள்ளைகளை பள்ளியில் சேர்க்குமுன் எவ்விதமான பிற்கால வாழ்க்கைக்கு தயார் செய்யப்போகிறோம் என்பதை நிர்ணயம் செய்து கொண்டு அதற்கு ஏற்றவாறு அதாவது நாட்டுப்புறவாழ்க்கைக்கு தயார் செய்வதானுல் அதற்குத் தகுந்தபடிப்பும் நகர வாசத்திற்குத் தயார் செய்வதானுல் நகர வாசத்திற்குத்தகுந்த மாதிரியான படிப்பும் கிடைக்கும்படி செய்யவேண்டும். இவைகளையெல்லாம் நாம் கவர்ன்மெண்டாரிடம் எதிர்பார்க்கக்கூடாது. எதையும் கவர்ன்மெண்டாரிடமிருந்து எதிர்பார்ப்பதே இந்தியர்களாகிய நமக்கு வழக்கமாய் போய்விட்டது "எவனொருவன் தன்னுடைய காரியத்தை முடித்துக்கொடுப்பதற்கு பிறரை எதிர்பார்க்கிருனே அவனுக்கு இயற்கையாயுள்ள சிறிய சக்தியும் அவனை விட்டு விலகி விடுகிறது" இவ்விதமாகவே நாம் எடுத்த காரியத்திற்கெல்லாம் கவர்ன்மெண்டாரை எதிர் பார்த்துப்பார்த்து நமது சக்தியை இழந்துவிட்டு வெறும் பேடிகளாயிருக்கிறோம். இனிமேலாவது நம் தேசத்திலுள்ள ஒவ்வொரு தொழில் வர்க்கமும் "தன் கையே தனக்கு உதவி" என்னும் ஆன்றோர் வாக்கைக்கடைப்பிடித்து ஒன்றுகச்சேர்ந்து ஐக்கியமுறையில் தங்கள் பிள்ளைகளுக்கென ஒவ்வொரு ஹைஸ்கூல் ஏற்படுத்தவேண்டும். இது கஷ்டமான காரியமல்ல ஐக்கியத்தாலும் ஆகாத காரியம் உலகிலுண்டோ? இல்லை.

ஒன்று பட்டாலுண்டு வாழ்வே நம்மில்
ஒற்றுமையில்லையேல் அனைவருக்கும்
[தாழ்வே!

எம், ஏ, ஆண்டமுத்து கவுண்டர்.

---

# இந்தியாவின் பூர்விக செல்வ நிலைமை.

இந்தியா இக்காலத்தில் உலகத்திலுள்ள தேசங்களெல்லாவற்றிலும் மிக்க எளிய தேசமென்று சொல்லப்படுகின்றது. ஆனுல், அது சென்ற காலத்தில் உலகத்திலுள்ள தேசங்களெல்லாவற்றிலும் மிக்க வலிய தேசமாயிருந்தது. விக்கிரக ஆராதனை செய்பவர்களும் கடவுளுடைய விரோதிகளுமான ஹிந்துக்களை மிகுந்த மதிப்போடு நடத்துவதற்குக் காரணமென்னவென்று ஜெஹாங்கிர் சக்ரவர்த்தி இளவரசரா

யிருந்த காலத்தில் தனது தந்தையாகிய அக்பர் சக்கரவர்த்தியைக் கேட்டபோது, அவர் அவ்வாறு செய்து வந்ததற்குப் பல காரணங்களைக் கூறினர். ஆனல், அக்பர் சக்ரவர்த்தி கூறிய வற்றில் ஜெஹாங்கிர் மனத்தில் அழுத்தமாக ஊன்றிய காரணம், சகல வித்தைகளும், கைத்தொழில்களும், சாஸ்திரங்களும் ஹிந்துக்களுடைய கையில் இருந்தனவாதலால் அவர்களை அழிப்பது பெரும் பிழையாயும், நஷ்டமாயும் முடியுமென்பதே.

முகம்மதியர்கள் யுத்தம் செய்யக்கூடும். ஆனல், அவர்கள் பொருள் வரவு செலவு விவரம் ஒன்றையும் அறியார் என்றும் அக்பர் கூறினர். வித்தைகளையும், கைத்தொழில்களையும் கற்றல் தமது தகுதிக்குத் தாழ்ந்ததென்று நினைத்து முகம்மதியர்கள் அவற்றைக் கல்லாது விட்டுவிட்டார்கள். வித்தைகளிலும் கைத்தொழில்களிலும் சாஸ்திரங்களிலும் ஹிந்துக்கள் முகம்மதியர்களைவிட மேம்பட்டிருந்தது மாத்திர மல்லாமல், உலகத்திலுள்ள வேறெந்த ஜாதியாரினும் மேம்பட்டிருந்தார்கள். இந்த மேம்பாட்டினல் தான் இந்தியா தேசம் உலகத்தின் பல பாகங்களிலிருந்தும் பொன்னைக் கவர்ந்து மிகுந்த செல்வமுள்ள தேசமாயிற்று.

தவிரவும், தங்கம், வெள்ளி முதலிய உலோகச் சுரங்கங்களும், வைரம், வைடூரியம் மாணிக்கம் முதலிய ரத்தினச் சுரங்கங்களும் முத்து பவளம் முதலிய விலையுயர்ந்த மணிகளுள்ள கடல் துறைகளும் ஏராளமாக இந்தியாவில் இருந்தன. உலகத்தின் ஒவ்வொரு பாகத்திலிருந்தும் செல்வம் இந்தியாவில் புகுந்துகொண்டிருந்தது. இந்தியாவிலுள்ள செல்வம் அதை விட்டு வெளியில் போகாமலிருந்தது. ஏனெனில், அக்காலத்தில் இந்தியாவில் எதிர்க்கவோ அல்லது கொள்ளையடிக்கவோ தக்க வலுமையுள்ள ஜாதியாய் எவரும் இல்லை. இந்தியாவின் கிழக்குப்பாகத்தில் யாத்திரை செய்த டெரி எனபவர் தமது யாத்திரையைப்பற்றி எழுதியுள்ள (Derry's Voyage) நூலில் கூறியுள்ள பின்வரும் வாக்கியமானது அக்காலத்தில் இந்தியாவில் எவ்வாறு பொன் மிகுந்திருந்ததென்பதைக் காட்டுகின்றது:—"பல நதிகளும் சமுத்திரத்திற்குள் ஓடித்தங்குதல் போல் தங்கமும் வெள்ளியும் இந்தியாவுக்குள் ஓடித்தங்கி இதர தேசங்களின் ஜனங்கள் தங்களுடைய தங்கக்கட்டிகளையும் வெள்ளிக்கட்டிகளையும் கொண்டுவந்து இந்தியாஜனங்களிடம் கொடுத்துவிட்டு அவர்களிடமிருந்து பல வகையான விளை பொருள்களையும் கைத்தொழிற் பொருள்களையும் வாங்கிக்கொண்டு சென்றார்கள்."

இக்காலத்தில் இங்கிலாந்து தேசம் வியாபார சம்பந்தமாக அடைந்த உன்னத நிலைமையை அக்காலத்தில் இந்தியா தேசம் அடைந்திருந்தது. என்ன என்ன சரக்குகளில் இந்தியா அவ்வாறு மேம்பாடுற்றிருந்தது? டக்கா 'மஸ்லின்' (ஸல்லாக்கள்,) காஷ்மியர் நாட்டு 'ஷால்' (சால்வைகள்) பட்டுகள், முதலிய எண்ணிறந்த சரக்குகள். இவைதவிரப் பலவகைச் சிட்டித் துணிகளும் இந்தியாவிலிருந்து அமிதமாய் அந்நிய நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. ஆனல் மண்பாத்திரத்தொழிலிலும் மரப்பொருள் தொழிலிலும் இந்தியா மற்ற தேசங்களினும் மேம்பட்டிருந்ததாக நமக்குத் தெரியவில்லை. "ஷூடோ விஸ்டி வார்த்திமா" என்னும் ஐரோப்பியர் தமது யாத்திரைகளைப் பற்றி எழுதியுள்ள நூலில் "நான் பார்த்த எல்லா வியாபாரிகளிலும் செல்வம் மிக்கவர்கள் இந்தியாவிலிருக்கிறார்கள். இதர தேசங்களைக் காட்டிலும் இங்கே பல வகைத் தானியங்களும் சர்க்கரையும் இஞ்சியும் பருத்தியும் ஏராளமாய் நிரம்பி யிருக்கின்றன. ஒவ்வொரு வருஷத்திலும் ஐம்பது கப்பல்கள் நிறையப் பருத்தித் துணிகளும், பட்டுத் துணிகளும் இத்தேசத்திலிருந்து அந்நிய தேசங்களுக்குச் செல்லுகின்றன.

மான்டி மான்ஸ்டார்ட் என்பவர் "உலகதில் பல பாகங்களில் செய்யப்படும் மரப் பெட்டிகளைவிட மிகவும் அழகும் உறுதியும் வாய்ந்த மரப் பெட்டிகள் அங்குச் செய்யப்படுகின்றன" என்கிறார். எம். பெர்னிய என்பவர் மெக்ஸிகோ தேசத்து வெள்ளியும், பெரு தேசத்துத் தங்கமும் சிறிது காலம் ஐரோப்பா கண்டத்திலும் ஆசியா கண்டத்திலும் நடமாடி விட்டுப் பின்னர் இந்தியாவுக்குப் போய்ச் சேருகின்றன. அங்கிருந்து அவை ஒருபோதும் வெளியேறுவதில்லை" என்கிறார். ஆதலால் அக்பர் சக்கரவர்த்தி ஹிந்துக்களை வருத்துதல் கூடாதென்று ஜெஹாங்கிருக்குப்புத்தி சொன்னர்; ஜெஹாங்கிரும் அப்புத்தியைச் சரியென்று உட்கொண்டு நடந்தார். மொகலாயர் இந்தியாவுக்கு வருமுன்னர் ஆப்கானிஸ்தானத்துக்குறவர்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வந்து மலை மலையாகத் தங்கத்தைக் கொள்ளையடித்துக்கொண்டு போனார்கள். அவர்கள் அவ்வாறு இந்தியா தேசத்துத் தங்கத்தை மலை மலையாகக்கொண்டு போயும் இந்தியாவில் பின்னும் ஏராளமாகத்தங்கம் இருந்தது. மொகலாயர் இந்தியாவுக்கு வந்தபோது இந்தியாவானது உலகத்திலுள்ள மற்றெந்த தேசத்தினும் அதிகச்செல்வமுடையதாகவேயிருந்தது. அக்காலத்தில் இந்தியாவில் தங்கமானது இக்காலத்தில் செம்பு மதிக்கப்படுகிறபடியேமதிக்கப்பட்டு வந்தது.

ஜெஹாங்கிர் தமது சரித்திரத்தில் எழுதியுள்ள பின் வரும் விஷயங்கள் இந்தியாவானது அவருடைய காலத்தில் எவ்வளவு செல்வமுடையதாயிருந்ததென்பதைக் காட்டும். "சேனாதிபதியாகிய மான்சிங் என்பவர் சக்ரவர்த்தியைப் பார்க்க வந்த ஒவ்வொரு சமயத்திலும் பதினெட்டு லக்ஷ ரூபாய் காணிக்கை கொண்டு வரக்கடமைப்பட்டிருந்தார்; அவ்வாறு அவர் வருஷத்திற்கு இரண்டு முறைக்குக் குறையாமல் வருவது உண்டு. "விக்கிரமாதித்த மகாராஜன் தனது நகரத்தின் காசுக்கடைகளில் தொண்ணூறு கோடி ரூபாய் கொடுத்து வைத்திருந்தாராம். இக்கணக்கு உத்தேசமாகக் கணிக்கப்பட்டதென்று வைத்துக்கொண்டாலும், இக்காலத்தில் லக்ஷாதிபதிகளைக் காண்பது அருமையாயிருப்பது போல அக்காலத்தில் கோடீஸ்வரர்களைக் காண்பது அருமையாயிருந்ததில்லையென்பது மாத்திரம் சந்தேகமற்ற விஷயம். அக்பர் சக்கரவர்த்தியிடமிருந்து ஜெஹாங்கிர் அடைந்த சிம்மாசனத்தை அலங்கரிப்பதற்கு மாத்திரம் மூன்றுகோடி ரூபாய் செலவாயிற்று. ஒவ்வொன்று பதினைந்து லக்ஷ ரூபாய் விலையுள்ள பன்னிரண்டு வைரக்கற்கள் அச்சிம்மாசனத்தில் பதிக்கப்பட்டன. ஆக்ரா நகரின் கோட்டை ஒன்றுக்கு மாத்திரம் இருபத்திநாலு கோடியே ஐம்பத்தாறு ரூபாய் செலவாயிற்று.

ஜெஹாங்கிர் தமது சரித்திரத்தில் தமது அந்தப்புரச் செலவுகளுக்கும் தமது அரண்மனை சிப்பந்திச் செலவுகளுக்கும் மாத்திரம் வருஷந்தோறும் பதினைந்து கோடியே பன்னிரண்டு லக்ஷம் ரூபாய் பிடித்ததாகக் குறித்திருக்கிறார். அவர் நூர்ஜிஹானை விவாகம் செய்தபோது அவ்வாசிக்கு நகைகளுக்கு மாத்திரம் ஏழு கோடியே இருபது லக்ஷம் கொடுத்தார். அவர்களுடைய முத்து மாலையில் ஒவ்வொன்று ஐம்பதினயிரம் ரூபாய் விலையுள்ள நாற்பது முத்துகள் அடங்கியிருந்தன. அவருடைய மருமக்களில் ஒருத்திக்கு ஒவ்வொன்றும் பதினயிரம் ரூபாய் விலையுள்ள அறுபது முத்துக்களடங்கிய முத்தாரமொன்று இனமாக அளித்தார். அவருடைய தம்பியாகிய தானியெல் என்பவர் தக்ஷண தேசத்தில் வசித்திருந்தார். அவர் இறந்தபின் அவருடைய உடைமைகள் ஆக்ரா நகருக்குக் கொண்டுவரப்பட்டன. அவை மதிப்புக் கடங்காத விலை பெற்றவை. அவர் சரீரத்தில் அணிந்திருந்த நகைகள் மாத்திரம் நாற்பத்தைந்து கோடி ரூபாய் விலை பெறுமென்று மதிப்பிடப்பட்டன. அக்பர் தாம் சேர்த்து வைத்திருந்த திரவியம் எவ்வளவிருக்குமென்று பார்க்கக்கருதி முதலில் தமது பொக்கிஷத்திலிருந்த தங்கத்தை நிறுத்துக் கணக்குத் தயாரித்துத் தமக்குக் கொடுக்கும்படியாகக் கிலிட்ஜிகானுக்கு உத்தரவு செய்தார். அத்தங்கத்தைக்கணக்கிட்ட விவரத்தைப்பற்றிப் பின் வருமாறு தமது சரித்திரத்தில் ஜெஹாங்கிர் எழுதியுள்ளார்:—"அவ்வுத்தியோகஸ்தர் (கிலிட்ஜிகான்) 'ஆக்ரா' நகர் பொக்கிஷசாலையிலிருந்த தங்கத்தை விலை மதிப்பதற்காக நிறுக்கத்தொடங்கினர். அந்நகரிலுள்ள பல வியாபாரிகளிடமிருந்து நானூறு ஜோடி பெரிய தராசுகள் தருவித்து அவற்றால் ஐந்து மாதம் இரவும் பகலும் இடைவிடாமல் தங்க நாணயங்களையும் தங்கக்கட்டிகளையும் நிறுக்கும்படி செய்தார். ஐந்து மாதம் கழிந்தவுடன் எனது தகப்பனர் எத்தனை மணங்கு தங்கம் பொக்கிஷத்தில் இருந்ததென்று தெரிந்து வரும்படி அவ்வுத்தியோகஸ்தருக்கு ஆளனுப்பினர். ஐந்து மாதம் இரவும் பகலும் இடைவிடாது ஆயிரம் மனிதர் நானூறு ஜோடி தராசுகளைக்கொண்டு ஒரு பொக்கிஷ அறையின் தங்கத்தை மாத்திரம் நிறுத்துக்கொண்டு வந்ததில் அத்தங்கம் முழுவதும் நிறுத்து முடிவாகவில்லையென்று அவ்வுத்தியோகஸ்

தார் பதில் அனுப்பினார். அதன் பின்னர் என்னது தகப்பனார் நிறுக்கும் வேலையை அம்மட்டில், நிறுத்தும் படிக்கும், நிறுக்கப்பட்ட தங்கங்களை அதனதன் இடத்தில் வைத்து அரங்கைப்பூட்டி முத்திரை வைக்கும் படிக்கும் உத்தரவு செய்தார். இஃது ஒரு நகரின் ஒரு பொக்கிஷசாலையிலிருந்த தங்கத்தைப்பற்றி நடந்த காரியம்."

இந்தியா தேசத்து ஜனங்கள் மோகல் அரசாட்சியில் அடைந்திராத சமாதானத்தையும் பாதுகாப்பையும் பிரிடிஷ் அரசாட்சியில் அடைந்திருக்கிறார்கள். அக்காலத்தில் சகல அதிகாரங்களும் ஒரு மனிதனிடத்தில் இருந்தன; அதனால் குற்ற மற்ற மனிதரும், குற்றம் செய்ததாகத் தண்டனையடைதல் கூடும். ஆனால், மோகல் அரசர் இந்தியாவைத் தமது வாசஸ்தலமாகக்கொண்டிருந்தனர்; தூரதேசங்களில் தமது சொந்த வாசஸ்தலங்களைக்கொண்டு இரை கவரவரும் பறவைகளைப்போல அவ்வரசர் தூரதேசங்களில் தமது வாசஸ்தலங்களைக் கொண்டிருக்கவில்லை. இந்தியா தற்காலத் துறைத்தனத்தாருக்கு ஓர் அந்நிய தேசமாயிருப்பதுபோல அவ்வரசருக்கு அந்நிய தேசமாயிருக்கவில்லை. ஆதலால், அக்காலத்தில் இந்தியாவிலிருந்து பணம் அந்நிய தேசத்திற்குப் போகவில்லை. முகமதிய அரசாட்சியில் இந்தியா அளவு கடந்த செல்வ நிலைமையில் இருந்ததற்கு முக்கிய காரணம் இதுவே.

(8-வது பக்கத்தின் தொடர்ச்சி.)

ஏற்படுத்தவேண்டும் என்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேபிப்பவர் ஈ.வெ. ராமசாமி நாயக்கர் ஆமோதிப்பவர் S. ராமநாதன் என்பதையும் தேசிய ஒற்றுமையையும் பற்பல சமூகத்தாரின் நன்மைகளையும் உத்தேசித்து கான்பூர் காங்கிரசில் சட்டசபை தேர்தல்களை காங்கிரஸ் நடத்தும்படி தீர்மானித்த பிறகு, நமது மாகாணத்தில் அத்தேர்தல்களை நடத்தும் பொருட்டு, ஓர் தேர்ந்தெடுக்கும் கமிட்டியை நியமித்து நடத்திவைப்பது அவசியமாகும் என்று, இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

பிரேரேபிப்பவர் P. வரதராஜுலு நாயுடு என்பதையும் வாசித்துக் காட்டி சுயராஜ்யக்கட்சியார் தேர்தல்களை நடத்தப்போவதால் இவ்விரண்டு தீர்மானங்களுக்கும் அர்த்தமில்லை என்று சொல்லி இவைகளை தான் ஒழுங்கு தவரானதென்று தீர்மானித்து விட்டதால் இவைகளை பிரேரேபிக்கக்கூடாது என்று சொல்லிவிட்டார். ஸ்ரீமான். ராமசாமி நாயக்கர் எழுந்து கொஞ்சநேரத்திற்கு முன்புதானே 25 பேர் பிரதிநிதிகள் கையெழுத்து போட்டால் பிரேரேபிக்கலாம் என்று சொன்னீர்கள் அதையும் ஒப்புக்கொண்டு 30பிரதிநிதிகள் கையெழுத்தும் வாங்கிக்கொடுத்தேன். இப்பொழுது திடீரென்று சில பிராமணர்கள் வார்த்தையைக்கேட்டு இப்படி சொல்லுகிறீர்களே இது என்ன நியாயம் என்று கேட்டார். (இந்த சமயம் சில பிராமணர்கள் உட்கார் உட்கார் என்று கத்தினார்கள்.) நாயக்கர் அவர்களைப்பார்த்து இப்போது தனக்கும் அக்கிராசனாதிபதிக்கும் தான் தப்பு என்று நினைக்கிற ஒரு விஷயத்தின் பேரில் பேச்சுவார்த்தை நடக்கிறதென்றும் மற்றவர்கள் இதில் பிரவேசிக்கவோ கத்தவோ கூடாது என்றும் மீறி அயோக்கியத்தனமாகவாவது அதிகப்பிரசங்கத்தனமாகவாவது யாராவது கத்துவீர்களானால் அவரவர்களுக்குத்தகுந்த புத்தி கற்பிக்க தன்னால் கூடுமென்றும் யாராருக்கு தன்னுடைய மரியாதையைக்காப்பாற்றிக் கொள்ள ஆசையிருக்கிறதோ அவர்கள் வாயை மூடிக்கொண்டிருக்கவேண்டுமென்றும் அக்கிராசனர் தன்னை உட்காரும்படி சொன்னாலாவது வெளியில் போகும்படி சொன்னாலாவது தான் உட்காரவோ வெளியில் போகவோ தயாராயிருப்பதாகவும், அய்யங்கார்கள் பேச்சைக்கேட்டுக் கொண்டு நீங்கள் கத்துவதாலோ கலவரம் செய்வதாலோ ஒரு காரியமும் சாதித்து கொள்ளமுடியாது என்றும் கொஞ்சம் ஜாக்கிரதையாய்த்தானே இருங்கள் என்றும் சொல்லி விட்டு அக்கிராசனரைப்பார்த்து என்ன முடிவு சொல்லுகிறீர்கள் என்றும் கேட்டார்.

அக்கிராசனர் ஸ்ரீமான். கல்யாணசுந்திர முதலியார் பதிலளிக்கையில் கையெழுத்து வாங்கி வரும்படி சொன்ன சந்தர்ப்பத்தில் இருந்த நிலைவேறு இப்போதைய நிலை வேறு என்றார்.

நாயக்கர் ஒரு மணிநேரத்திற்கு முன் புதானே தாங்கள் கையெழுத்து வாங்கி வரும்படி சொன்னீர்கள் அதற்குள் நிலைமை ஒன்றும் மாறவில்லையே அய்யங்காருக்கு பயந்து அவருக்கு நீங்கள் அடிமையாய் விட்டதைத்தவிர வேறில்லையே நீங்கள் கூட இப்படிச்செய்யலாமா! என்று சொன்னார்.

ஸ்ரீமான் முதலியார் நான் யார் சொற்படியும் கேழ்க்கவில்லை தேசநன்மையை உத்தேசித்து என்மனதில் தோன்றியதை சொல்லுகிறேன் என்று சொன்னார்.

நாயக்கர்:—நீங்கள் அய்யங்கார் பேச்சைக்கேட்டாலும் சரி பிராமணர்கள் உங்களை தங்கப்பல்லக்கில் வைத்து வைரத்தால் கிரீடம் சாத்தி தூக்கிக்கொண்டு சுமந்தாலும் சரி எனக்கு அக்கரையில்லை உங்கள் யோக்கியதையை சபையோர் அறியவேண்டுமென்பது தான் என் ஆசை மற்றபடி இந்தக்கூட்டத்தில் தீர்மானமாகிவிட்டால்த் தான் பிராமணரல்லாதருக்கு நன்மை ஏற்பாடுமென்றாவது இல்லாவிட்டால் ஏற்படாதென்றாவது நான் பயப்படவில்லை.

ஸ்ரீமான் முதலியார்:—நான்சொல்வது சரிதானா இல்லையா என்பதை ஸ்ரீமான் வரதராஜுலு நாயுடுவைக்கேளுங்கள் என்று ஸ்ரீமான் நாயுடுவைப்பார்த்து நான்செய்தது சரிதானே என்று கேட்டார்,

ஸ்ரீமான்:—நாயுடு சரி என்று சொன்னார். (எல்லோரும் சிரித்தார்கள்)

ஸ்ரீமான் நாயக்கர்:—ஸ்ரீமான் நாயுடுவைக் கேழ்ப்பானேன் அவரைவிட ஸ்ரீமான். சீனிவாசய்யங்காரையே கேளுங்களேன் அவர்தான் உங்களை இப்போது நடத்துகிறார் அடியோடே சரி என்று சொல்லி விடுவாரே என்று சொல்லி பொது ஜனங்களைப் பார்த்து நீங்களே இவர்கள் யோக்கியதையைத் தெரிந்து கொள்ளுங்கள் என்று சொல்லிக் கூட்டத்திற்கு வெளியில் வந்துவிட்டார். கூடவே ஸ்ரீமான்கள். சர்க்கரைச் செட்டியார், S. ராமநாதன், ஆரியா மேனன் மற்றும் பலரும் புறப்பட்டு விட்டார்கள்.

## ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர்

இவ்வாரம் 29வ ஞாயிற்றுக்கிழமை வைக்கத்தில் நடக்கும் சத்தியாக்கிரக வெற்றி கொண்டாட்ட மகாநாட்டுக்கு அக்கிராசனம்வகிக்க ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் தமது மனைவியுடன் செல்லவேண்டியேற்பட்டுவிட்டதால் சேலத்தில் தீண்டாதாருக்கும் ஏழைமக்களுக்கும் கல்விகற்றுக் கொடுப்பதற்காக ஏற்படுத்தப்பட்ட ஸ்ரீ தியாகராய நிலயம் என்னும் மெத்தைக்கட்டடத்தை திறந்துவைக்க ஒப்புக்கொண்டதை அடுத்த வாரத்திற்கு தள்ளிவைக்கவேண்டிதாய் ஏற்பட்டுப்போய்விட்டது ஆதலால் டிசம்பர்மீ 5ம்தேதி இவ்வைபவம்நடக்கும், அன்றையதினமே சென்னை ஸ்ரீமான் டாக்டர் C.நடேச முதலியார் அவர்களால் ஷை ஸ்ரீதியாகராயநிலயத்தின் ஆதரவில் ஒரு நூற்பவர் சங்கம், ஸ்தாபித்து கதர்ச்சாலை ஒன்றும் திறக்கப்படும். டிசம்பர் 6வ குப்பாண்டிங் இஞ்சினீர் ஸ்ரீமான். P. V. மாணிக்க நாயக்கர் அவர்கள் அக்கிராசனத்தின்கீழ் பல தமிழ் அறிஞர்களின் சொற்பொழிவுகள் நடைபெறும் ஸ்ரீமான்கள் பி. வரதராஜுலு நாயுடு; கல்யாணசுந்தர முதலியார் முதலிய தேசபக்தர்கள் அழைக்கப்பட்டிருக்கிறார்கள்.

## திரிசிரபுரத் தமிழ்ச் சங்கம்

நிகழும் குரோதன ஆண்டு, கார்த்திகைத்திங்கள், உ௰, உக (5,6—12—25) சனி, ஞாயிறு நாட்களில் இச்சங்கத்தின் மூன்றாம் ஆண்டு நிறைவு விழா இவ்வூர் மலைவாசல் பழக்கடை தண்ணீர்ப்பந்தர் கட்டிடத்தில் கோயமுத்தூர், வழக்கறிஞர் திருவாளர் C. K. சுப்பிரமணிய முதலியார் அவர்கள் B. A., F. M. U. தலைமையின்கீழ் இனிது நடைபெறும்.

அவ்வமயம், ஆராய்ச்சித்துறைகளிற் சிறந்த பெரியார் பலர் அரிய விரிவுரைகள் நிகழ்த்துவார்கள். தமிழ் அன்பர்கள் பலரும் வந்து, இருந்து கேட்டு இன்புற்று தமிழ்ச்சங்கத்தைப் பெருமிதமாக்க வேண்டுகின்றோம்.

தங்களன்பிற்குரிய,
தி. மு. நாராயணசாமி பிள்ளை,
M. A., B. L., M. L. C.
சங்கத்தலைவர்.

திருச்சி.
பொ. ஐயாச்சாமி பிள்ளை,
கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,
அமைச்சர்கள்.

வந்தேமாதரம்.

## கரூர் சுயம் கத்தர் ஜவுளிகள்.

தமிழ் நாட்டு கத்தர் போர்டாரால் நற்சாக்ஷி பத்திரம் பெற்ற கீழ்கண்ட கத்தர் ஸ்டோரில் உடை நாணயத்திலும் நெசவு அழுத்தத்திலும் நீடித்து உழைக்கக்கூடியதுமான பலரகம் வேஷ்டிகள், துண்டுகள், அங்கவஸ்திரம், வெள்ளை பீஸ்கள், ஷர்டிங், கோட்டிங், சால்வைதினுசுகள் கத்தர் போர்டின் விலைக்கே விற்கப்படும். தேவைக்கு அட்வான்சுடன் ஆர்டர் செய்யுங்கள்.

S. ராமசாமி அய்யர்,
ராமவிலாஸ் கதர் ஸ்டோர்ஸ் கரூர்.

அத்தாட்சிப்பத்திரம்

(தமிழ்நாட்டுக் காங்கிரஸ் கமிட்டி) ஸ்ரீமான் எஸ். ராமசாமி அய்யர் ராமவிலாஸ் கத்தர் ஸ்டோர் கைநூலால் கைத்தரியால் தயார்செய்யப்பட்ட சுத்த கத்தர் துணிகளையே உற்பத்தி செய்து நியாயமான விலைக்கு விற்றுக்கொண்டிருக்கிறார்.

(ஒப்பம்) வா. மு. தங்கப்பெருமாள்,
காரியதரிசிகத்தர், இலாகா.



## உண்மையான கதர். கெட்டியான கதர்.

கதர் வாங்குகிறவர்கள் விலையை கவனிப்பதுடன் சரக்கு அழுத்தத்தையும், நயத்தையும், கெட்டியையும் கவனிக்கவேண்டியது முக்கியமான கடமை. தமிழ்நாடு காங்கிரஸ் கதர் போர்டாரின் உதவியாலும், மேற்பார்வையாலும், அத்தாட்சிப் பத்திரத்துடனும் நடை பெறுகின்றது. கதர் போர்டாரின் விலைக்கே விற்கப்படும்.

காங்கிரஸ் அத்தாட்சிப் பத்திரம்

ஸ்ரீகாந்தி கதராலயத்தார் கைநூலால் கைத்தரியால் தயார் செய்யப்பட்ட உண்மையான கதர் உற்பத்திசெய்து நியாயமான விலைக்கு விற்கிறார்கள்.

வா. மு. தங்கப்பெருமாள்,
காங்கிரஸ்கதர் போர்டு காரியதரிசி.

ந. ராமசாமி
மானேஜர், ஸ்ரீகாந்தி கதராலயம்,
திருப்பூர்

## ஓர் மஹானின் மகிமை.

"அருமையான மூலிகையும் ரகைஷயும்."

குஷ்டம், க்ஷயம், முதல் சகலவித வியாதிகளும், செய்வினைகளும் நீங்கியும், புத்திர பாக்கியம் உண்டாகியும் அபாரமான எக்காரியங்களும் கோரியபடி முடிந்தும், ஏராளமான நற்சாக்ஷிகளும் சங்கத்தில் தங்கமெடலும் பெற்றவை.

எதற்காக தேவையானாலும் பதிலுக்கு ஸ்டாம்பு வைத்து கோயமுத்தூர் ஜில்லா மேட்டுப்பாளையம் பாலச்சந்திரன் ஆபீஸ் தலைவர், ஸ்ரீமான். எஸ். ஏ. கே. பிள்ளையவர்களுக்கு விபரமாக எழுதிக் கொள்வீர்களானால் சகலவிபரமும் புக்கும் கிடைக்கும்.

## இலங்கை நாட்டுக்கு நமது ஏஜண்டு.

இலங்கை நாட்டுக்கு நமது "குடி அரசு"ப் பத்திரிக்கையின் ஏஜண்டாக இருக்க கொழும்பு செட்டித்தெரு, 45-ம் நெம்பர் கட்டடத்திலுள்ள சுத்தக் கத்தர் ஜவுளி நிலையம், ஸ்ரீமான். பெ. பெரி. சுப்பிரமணியஞ் செட்டியாரவர்களைக் கேட்டுக்கொண்டதின் மேல் அவரும் சம்மதித்ததால் அவரை நியமித்திருக்கிறோம். நமது பத்திரிகைக்குச் சந்தாதாரராகச் சேர விரும்புகிறவர்கள் ஷையாரிடம் சந்தா செலுத்தி ரசீது பெற்றுக் கொள்ளலாம்.

மானேஜர்.

இனம்! இனம்!!

நூறு வருஷத்திய காலண்டரும், புஸ்தக சமாச்சாரங்களடங்கிய பத்திரிகையும் தபால் செலவின்றி அனுப்புவோம்.

ஸ்ரீ சாது ரத்ந சற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் (P. O) சென்னை.

## "தேசோபகாரி"

பர்மாவில் விடுதலை முழக்கஞ் செய்துவரும் ஓர் தமிழ் வாரப்பதிப்பு.
வருஷ சந்தா ரூபாய் ஐந்து.

மானேஜர்,
"தேசோபகாரி" லிமிடெட்,
45-36வது வீதி. ரங்கூன்.

## "தேசபக்தன்"

ஓர் தேசியத்தமிழ் பத்திரிகை.

பிரதி திங்கள், புதன், வெள்ளிதோறும் வெளிவருவது. விளம்பரத்திற் கேற்றது.
வருடசந்தா ரூபாய் 13.
வெளிநாடுகளுக்கு ரூபாய் 16.

காரியஸ்தர்,
"தேசபக்தன்" கொழும்பு.

## "தெய்வீகன்."

பார்க்கவகுல முன்னேற்றத்தை நாடியுழைக்கும் ஓர் மாத சஞ்சிகை.

பார்க்கவர்கட்கு வருட சந்தா ரூ. 2-0-0
ஏனையோர்கட்கு வருட சந்தா ரூ. 1-8-0

காரியஸ்தர். "தெய்வீகன்"
பொன்மலை, திருச்சி.

## நவ இந்தியா.

ஓர் வாரப்பத்திரிகை. ஆசிரியர்.
ஸ்ரீமான். டி. என். தியாகராஜ ஞானியார்.
வருட சந்தா ரூ. 5.

மானேஜர், நவ இந்தியா,
திருவாரூர், S. I Ry.

வெள்ளியை கொடுத்து தங்கத்தைப் பெறுங்கள்.
வந்தாலும் போனாலும் சரி என்ற லாட்டரி இல்லை.
கைமேல் பலன் கிடைக்கும் இது ஹம்பக்கில்லை.
பட்ட பகல் போல் வெட்ட வெளிச்சமானது
ஒரு ரூபாய் வெள்ளி நாணயமாகக் கொடுத்தால் 32

## ஆதங்க நிக்ரஹ மாத்திரைகள்.

பெறலாம்.

அதனை உபயோகித்தவர்கள் அது "தங்கத்திற்குச் சமமான நிறையுள்ளதென்று" கூறியிருக்கின்றனர். மனத்திலும், தேகத்திலுமுள்ள கோளாறுகளைப் போக்கடித்துப் பலஹீனம் அஜீர்ணம் முதலிய வியாதிகளை சாஸ்தமாக கண்டிக்கின்றது.

விபரம் வேண்டுவோர் இன்றே கிரைய ஜாப்தாவுக்கு எழுதுங்கள்.

ஆதங்க நிக்ஹ ஔஷதாலயம்,
26, பிராட்வே மதராஸ்.

## விசேஷ அறிவிப்பு.

நமது "குடி அரசு" பத்திரிக்கையை தென் இந்தியா ரயில்வே ஸ்டேஷன்களிலுள்ள மெஸர்ஸ் ஹிக்கின் பாதம்ஸ் கம்பெனியார்களின் புத்தக சாலைகளில், விற்பனைசெய்ய ஏற்பாடு செய்திருக்கிறோம்.

தேவையுள்ளவர்கள் வாங்கிக் கொள்ளலாம்.

விலை அணா ஒன்று

மானேஜர்.

## டைமண்ட் பிரஸ், ஈரோடு

எங்கள் அச்சாபீசில் தமிழ், இங்லீஷ் பாஷைகளில் நேர்த்தியான கலர் வேலைகள் அவரவர் இஷ்டப்படி குறைந்த சார்ஜுக்கு குறித்த காலத்தில் அச்சடித்துக் கொடுக்கப்படும்.

K. N. பெரியசாமி நாயுடு,
புரொப்ரைட்டர்.

ஈரோடு டைமண்ட் பிரஸில் அச்சிடப்பெற்று ஈ. வெ. ராமசாமி நாயக்கரால் வெளியிடப்பட்டது.